**இது ரகசியம் அல்ல!**

எதிர்வரும் புதன்கிழமை நாடாளுமன்றம் கூடும் போது ஐக்கிய தேசிய முன்னணி புதிய அரசை அமைக்க வேண்டும் எனக் கோரும் விதத்திலான பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து, நிறைவேற்றித் தனது பெரும்பான்மையைக் காட்டி அரசு அமைக்கும் உரிமையை ஐ.தே.மு. பக்கம் 02

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 16 ஞாயிற்றுக்கிழமை 02.12.2018 கதிர் 27

# ரெலோவின் கோரிக்கையின் பேரில் கூடுகிறது கூட்டமைப்பு உயர்பீடம்

## செவ்வாயன்று கொழும்பில்

கொழும்பு, டிசெம்பர் 02

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தத் தீர்மானத்தை - முடிவை - எடுத்தாலும், அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்பீடமான ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கீகாரத்துடன்தான் முன்னெடுக்கப்பட வேண்டும் என வற்புறுத்தியுள்ள ரெலோ, அதற்காக ஒருங்கிணைப்புக் குழுவை உடனடியாகக் கூட்டும்படி ஒரே பிடியாக வற்புறுத்தியுள்ளது.

அந்த வற்புறுத்தலின் பேரில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்குக் கொழும்பில் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை கூட்டுவதற்கு இணக்கம் காணப்பட்டிருக்கின்றது. பக்கம் 02

## நிபந்தனை விதித்து, உடன்பாடு எழுதியே அரசு அமைக்க ஐ.தே.முக்கு ஆதரவு தரலாம்

### கடும் பிடி பிடிக்கின்றது ரெலோ

கொழும்பு, டிசெம். 02

ஐக்கிய தேசிய முன்னணிக்கு அரசு அமைக்க ஆதரவு அளிக்கும் கடிதத்தை கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தைக் கூட்டாமலேயே கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு வழங்கியமை தவறானது.

தமிழரின் தேசிய அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் உரிய நிபந்தனைகள் விதித்து, அவை தொடர்பில் ஐக்கிய ஐக்கிய தேசிய முன்னணியுடன் எழுத்தில் பக்கம் 02

## ரணிலே பிரதமராக வேண்டும் பதவியேற்க மறுக்கிறார் சஜித்



கொழும்பு, டிசெ. 02

தற்போதைய சூழ்நிலையில் பிரதமர் பதவியைத் தான் ஏற்றுக் கொள்ளமாட்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன் தினம் இரவு நடத்திய பக்கம் 11

## மஹிந்தவின் ஆதரவாளர்கள் யாழ்ப்பாணத்தில் பேரணி



யாழ்ப்பாணம், டிசெ. 02

நாடாளுமன்றத் தேர்தல் விரைவாக நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்திப் பிரதமர் பக்கம் 11

## தனி ஈழத்தை அடைய சம்பந்தன் – ரணில் 'டீல்'

### விமல் வீரவன்ஸ பரபரப்புத் தகவல்



கொழும்பு, டிசெம்பர் 02

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான கள்ளத் தொடர்பு அம்பலமாகிவிட்டதாகத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ நேற்றுக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனி ஈழத்தை அடைவதற்கு இரு தரப்பும் இரகசிய உடன்பாட்டை எட்டியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – பக்கம் 11

## மஹிந்தர் இன்று விசேட அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 02

நாட்டில் அரசியல் நெருக்கடி உச்சம் தொட்டுள்ள நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று விசேட அறிவிப் பக்கம் 11

## நான் யாரெனத் தேர்தலில் நிரூபித்துக் காட்டுவேன்!

### மஹிந்த ராஜபக்ஷ சபதம்



கொழும்பு, டிசெ. 02

மஹிந்த ராஜபக்ஷ என்றால் யார், அவருக்கான பலம் என்னவென்பதை அடுத்த தேர்தலில் நிரூபித்துக் காட்டுவேன். நம்பவைத்து கழுத்தறுப்பு செய்த சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலரின் அரசியல் பயணத்துக்கும் பக்கம் 11

## கூட்டமைப்பின் தீர்மானம் வரலாற்றில் இடம்பிடிக்கும்

### வேலுகுமார் எம்.பி. வரவேற்பு

கொழும்பு, டிசெ. 02

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான அரசியல் சமரின்போது ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து பக்கம் 11

## வடக்கு – கிழக்கு இணைப்பைத் தடுக்கவே மஹிந்தவை பிரதமராக்கினார் ஜனாதிபதி!

### எஸ்.பி. போட்டார் புதிய குண்டு



கொழும்பு, டிசெ. 02

வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதைத் தடுக்கவே ஜனாதிபதி, மஹிந்த ராஜபக்ஷவைப் பக்கம் 11

## முல்லைத்தீவில் ஆயுதங்கள் மீட்பு



முல்லைத்தீவு, டிசெ. 02

புதுக்குடியிருப்பு, சுதந்திபுரம் பிரதேசத்தில் போர்க் காலத்தில் விடுதலைப் புலிகளால் மறைத்து பக்கம் 11

## வவுணதீவில் பொலிஸார் சுட்டுக்கொலை;

## பொலிஸ், ராணுவம் வீடு தேடிச் சென்றதால் நேற்றுச் சரணடைந்தார் முன்னாள் போராளி

கிளிநொச்சி, டிசெ. 02

மட்டக்களப்பு – வவுணதீவு சோதனைச்சாவடியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து நேற்று மாலை தொடக்கம் பொலிஸாரும் இராணுவத்தினரும் வட்டக்கச்சியில் உள்ள முன்னாள் போராளியின் வீடு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் தேடுதல் நடத்தியதால் பக்கம் 11

## பொட்டு நோர்வேயில்!

### கூறுகிறார் கருணாம்மான்

கொழும்பு, டிசெ. 02

விடுதலைப் புலிகள் அமைப்பின் புலனாய்வு பிரிவின் தலைவர் பொட்டம்மான் இறுதி யுத்தத்தில் இறக்கவில்லை. அவர் நோர்வேயில் உயிருடன் இருக் பக்கம் 11

காலைக்கதிர் Kalaikkathir



# நாடாளுமன்றக் கலைப்பு உத்தரவை மீளப் பெறத் திட்டமிடும் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ. 02

நாடாளுமன்றத்தைக் கலைத்து கடந்த மாதம் 9ஆம் திகதி வெளியிட்ட, சர்ச்சைக்குரிய வர்த்தமானி அறிவிப்பை மீளப்பெறுவது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீவிரமாக ஆலோசித்து வருகிறார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தகவலை சர்வதேச ஊடகமான ரொய்ட்டர் வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பாக அளிக்கப்படும் தீர்ப்பு தமக்குப் பாதகமாக அமையக் கூடும் என்ற அச்சத்திலேயே ஜனாதிபதி இந்த முடிவு குறித்து ஆராய்கிறார் எனக் கூறப்படுகிறது.

நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் மீது, எதிர்வரும் 7ஆம் திகதி உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கவுள்ளது.

இந்த நிலையில் அதற்கு முன்னதாக- பெரும்பாலும் எதிர்வரும் 5ஆம் திகதி, நாடாளுமன்றத்தைக் கலைத்து வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி ரத்துச் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதியுடன் தொடர்ச்சியாகக் கலந்துரையாடும் ஒருவர், இதுபற்றிக் கருத்து வெளியிடுகையில் –

வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி மீளப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு இருப்பதாகக் கூறியுள்ளார்.

நாடாளுமன்றக் கலைப்பு தவறானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் என்பதில் தனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



வர்த்தமானி அறிவிப்பை மீளப் பெறும் திட்டம் தொடர்பாகத் தான் எதையும் அறியவில்லை என்று, ஜனாதிபதியின் பேச்சாளர் தர்மசிறி ஏக்கநாயக்க கூறினார்.

இதேவேளை, உயர்நீதிமன்றம் தனக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கும் சாத்தியம் இல்லாததால், இந்தச் சிக்கலில் இருந்து கௌரவமாக வெளியேறுவதற்கு ஜனாதிபதி எதிர்பார்க்கிறார் என சிறிசேனவின் கட்சியைச் சேர்ந்த இன்னொருவட்டாரம் தெரிவித்துள்ளது. (ஐ)

# தமிழ்த் தலைமைகள் தெற்கில் தமிழரை அடகு வைத்துள்ளன

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. சீற்றம்

ஒரு கட்சிக்கு ஆதரவளித்ததன் மூலம் தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களை தெற்கில் அடகு வைத்துள்ளன எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியா கிடாச்சூரியில் நடைபெற்ற பிரதேச செயலகக் கலாசார விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கலைஞர்கள், புத்திஜீவிகள், பொதுமக்கள் ஒன்றிணைந்து கலை, கலாசாரத்தைப் பாதுகாப்பது போன்று அரசியல் ரீதியிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். இன்று தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றத்தை தமிழ் மக்களின் நலன் சார்ந்து இராஜதந்திர ரீதியாக முன்னகர்த்தக்கூடிய முகங்களை கை நழுவ விட் டுள்ளார்கள்.

நாடாளுமன்றத்தில் பிரதமரை நியமிப்பதற்கு அல்லது பெரும்பான்மையைக் காட்டுவதற்கு 113 உறுப்பினர்கள் தேவையான நேரத்தில் பல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கையில் வைத்துக்கொண்டு கொண்டு முன்னுக்குப் பின் முரண்பட்ட கருத்துக்களைக் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். ஒருதடவை கூறுகிறார்கள் நாங்கள் மஹிந்தவை ஆதரிக்கவில்லை. பின்னர் ரணில் விக்கிரமசிங்கவையும் ஆதரிக்கவில்லை என்கிறார்கள். அதன் பின் இருவரையும் ஆதரிக்கவில்லை என்கிறார்கள்.

பின்னர் இந்த நாட்டில் ஜனநாயகம் மீறப்பட்டுள்ளது, அரசமைப்பு மீறப்பட்டுள்ளது. அதற்காகத்தான் ஆதரவளிப்பதாகச் சொல்கிறார்கள்.

இதனையடுத்து நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடந்து, நீதிமன்றத்திலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இன்று இருவருக்கும் ஆதரவு இல்லை என்று கூறிய தமிழ்த் தலைமைகள் இப்போது ஒரு கட்சிக்கு அல்லது ஒரு கட்சியைச் சேர்ந்த நபர் பிரத மராக வேண்டும் என்பதற்காக எந்தவித நிபந்தனையுமின்றி ஆதரவளித்துள்ளார்கள். இதன் மூலம் தமிழ் மக்களை அடகு வைத்துள்ளார்கள். இதனை மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டும். – என்றார். (ஐ)

# சுட்டுக்கொலை செய்யப்பட்ட பொலிஸாருக்கு பதவி உயர்வு

கொழும்பு, டிசெ. 02

மட்டக்களப்பு, வவுணதீவுப் பிரதேசத்தில் வைத்துச் சுட்டுக் கொலை செய்யப்பட்ட பொலிஸ் அலுவலர்கள் இருவருக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன,

இருவருக்கும் கான்ஸ்டபிள் தரத்தில் இருந்து பொலிஸ் சார்ஜன்ட் தரத்துக்குப் பதவி உயர்வு வழங்கப் பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காகப் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவன்குணசேகர ஆகியோர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மட்டக்களப்புக்கு சென்றிருந்தனர்.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் விடே பொலிஸ் குழுவொன்று மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வவுணதீவு, வலையிறவு பாலத்திற்கு அருகில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் இரவு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால் கூட இப்போதைய அரசியல் நெருக்கடிக்கு உடனடித்தீர்வு வராது என்கின்றன விடயமறிந்த கொழும்பு அரசியல் வட்டாரங்கள்.

ஐ.தே.முன்னணி அரசு அமைப்பதற்கு உரிமை கோரும் பிரேரணை நாடாளுமன்றுக்கு வரும் தினத்தன்று சு.க. – பொது ஜன பெரமுன உறுப்பினர்கள் நாடாளுமன்றுக்குச் சமூகம் தந்து அங்கு சுமுக வாக்கெடுப்பு நடக்க விடாமல் குழப்பக்கூடும் என்று பலமாகச் சந்தேகிக்கின்றன சில அரசியல் தரப்புகள்.

அதையும் மீறி அந்தப் பிரேரணை பெரும்பான்மையினரின் ஆதரவுடன் தீர்மானமாக நிறைவேறினாலும் கூட, அதன் பின்னரும் ஐ.தே.மு. அரசு அமைவதற்கு வாய்ப்புக்கள் அரிது என்றே தோன்றுகின்றது.

தங்களது நம்பிக்கைக்குரிய பிரதமர் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கதான் – ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான் – என்று 115 இற்கும் குறையாத எம்.பிக்கள் முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றினாலும் கூட ரணிலைப் பிரதமராகக்குவதில்லை என்று ஜனாதிபதி தொடர்ந்து பிடிவாதம் – அடம் – பிடிக்கக் கூடும் என அவருக்கு நெருக்கமானவட்டாரங்கள் கூறுகின்றன.

அப்படி ஓர் இக்கட்டு வந்தால் அடுத்தது என்ன என்பதுதான் கேள்வி. இந்த விடயத்தில் ஐ.தே. முன்னணியும் விட்டுக் கொடுத்து கீழிறங்காது என்றே தோன்றுகின்றது.

அப்படி ஒரு சிக்கல் நீடித்தால் மீண்டும் நீதிமன்றுக்குச் செல்வதா? அல்லது ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றவிசாரணைப் பிரேரணை ஒன்றை சபாநாயகரிடம் கையளிப்பதா? – என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன.

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையின் நம்பிக்கைக்கு உரியவர் இவர்தான் எனப் பளிங்கு போல தென்படும் நிலையில் அவரைப் பிரதமராக நியமிக்க மாட்டேன் என ஜனாதிபதி அடம் பிடிப்பாராயின் அது ஜனநாயக விரோதச்செயற்பாடு, சட்டத்துக்கும் அரசமைப்புக்கும் முரண்பட்ட போக்கு.

அப்படி ஒரு ஜனாதிபதி பொறுப்பற்று நடப்பாராயின் என்ன செய்வது என்பது சட்டத்தில் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் வரையறுக்கப்படவில்லை.

இந்த ஜனாதிபதியின் அத்தகையதொடர்பித்தலாட்டங்களைப் பார்த்திருப்பதைத் தவிர நாட்டு மக்களுக்கு வேறு வழியில்லை.

அடுத்த ஒரு வருடம் – இவரது தற்போதைய ஆட்சிக் காலம் முடியும் வரை – அத்தகைய குசும்புகளைப் பார்த்திருப்பதுதான் நாட்டினதும் மக்களினதும் தலைவிதி போலும் ...!

-மின்னல் -

## ரெலோவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலோவின் நேற்றைய மத்தியகுழுக்கூட்டம் முடிந்தகையோடு அக்கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி, இலங்கைத்தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவுடன தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார்.

எதிர்வரும் புதன்கிழமை – 05 ஆம் திகதி – நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு அமைப்பதற்கு நம்பிக்கை வாக்கெடுப்பைக் கோரும் பிரேரணை நாடாளுமன்றத்திற்கு வரக்கூடிய வாய்ப்பு இருப்பதால், அதற்கு முன்னர் அந்த விடயம் தொடர்பில் கூட்டமைப்பு எத்தகைய அணுகுமுறையைக் கையாள வேண்டும் என்பது குறித்து ஆராய்வதற்காக கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவை அவசரமாகக் கூட்ட வேண்டும் என்று ரெலோ மத்திய குழு தீர்மானித்திருக்கின்றது எனும்செய்தியை மாவை சேனாதிராசாவுக்கு விளங்கப்படுத்தினார் செல்வம் எம்.பி.

அதையடுத்தே, மேற்படி விடயம் புதன்கிழமை நாடாளுமன்றில் எடுக்கப்படுதற்கு முதல் நாள் செவ்வாயன்று – அதாவது நாளை மறுதினம் – மாலை 4 மணிக்கு கொழும்பில் ஒருங்கிணைப்புக் குழுவை அவசரமாகக் கூட்டவும் –

இந்த விடயங்கள் குறித்து ஆராயவும் –

இணக்கம் காணப்பட்டிருப்பதாகத் தெரிய வந்தது.

ஐ.தே.முன்னணி அரசு அமைப்பதற்கு ஆதரவு தரும் விடயத்தை கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுவைக் கூட்டாமல், நாடாளுமன்றக் குழுவில் அது பற்றிய தீர்மானத்தை எடுத்து, உரிய கடிதத்தையும் சம்பந்தப் பட்ட தரப்புகளுக்கு வழங்கியமை தவறு என்ற நிலைப்பாட்டை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ரெலோ பிரதிபலிக்கும் என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## நிபந்தனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடன்பாடுகண்டு, அந்த உடன்பாட்டின் அடிப்படையில்தான் அந்த ஆதரவை வழங்கவேண்டும்.

இந்த விடயத்தை கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பேசித் தீர்மானிக்க வேண்டும்.

– இவ்வாறு நேற்றுக் கூடிய ரெலோவின் மத்திய குழுக் கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டதாக அறிய வந்தது.

ஐ.தே.முன்னணித் தரப்பு அரசு அமைப்பதற்கு ஆதரவளிப்பது என்ற தீர்மானத்தை நாடாளுமன்றக் குழு எடுத்து அது தொடர்பான கடிதத்தை ஒப்பமிட்டு ஜனாதிபதிக்குக் கையளித்தமையை அடுத்து எழுந்துள்ள அரசியல் நிலைமை குறித்து ஆராய்வதற்காக ரெலோவின் மத்திய குழு, குறுகியகாலமுன்னறிவித்தலோடு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வவுனியாவில் தனியார் மண்டபம் ஒன்றில் கூடியது, மாலை 6.30 மணி வரை இக் கூட்டம் நடைபெற்றது.

கட்சியின் தவிசாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கட்சியின் மத்திய குழுவின் நான்கு வெளிநாட்டு பிரதிநிதிகள் தவிர்ந்த எஞ்சிய 83 உறுப்பினர்களில் 69 பேர் கலந்து கொண்டனர். கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., செயலாளர் நாயகம் என். ஸ்ரீகாந்தா உட்பட கட்சியின் மூத்த பிரமுகர்கள் பலரும் பங்குபற்றினர். கட்சியின் உபதலைவர் ஹென்றி மகேந்திரன் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

ஐ.தே. முன்னணித் தரப்பு அரசு அமைப்பதற்கு ஆதரவளிக்கும் கடிதத்தை கூட்டமைப்பின் இணைப்புக்குழுவைக் கூட்டி ஆராயாமல், கூட்டமைப்பின் எம்.பிக்கள் 14 பேரும் தங்களுக்குள் முடிவு எடுத்து, ஒப்பமிட்டுக் கடிதம் அளித்தமையை நேற்றைய கூட்டத்தில் பங்கு பற்றிய பலரும் காரசாரமாகவும், கடுமையாகவும் கண்டித்துப் பேசினர்.

ஒப்பமிட்டுக் கடிதம் அளித்து விட்டமையால் இனி அதிலிருந்து அடுத்த கட்டமாக என்ன செய்வது என்பது குறித்தாவது ஒருங்கிணைப்புக்குழுவை கூட்டிஆராய வேண்டும் என வற்புறுத்துவதற்கு நேற்றைய கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

அரசு அமைப்பதற்கு ஐ.தே. முன்னணிக்கு வழங்கும் எந்த ஆதரவும் நிபந்தனையின் அடிப்படையிலேயே அமைய வேண்டும்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிடைக்கக் கூடிய – சாத்தியமான – விடயங்களை நிபந்தனையாக விதிக்க வேண்டும். அந்த நிபந்தனைகள் தொடர்பில் ஐ.தே.மு. தரப்புடன் எழுத்துமூலம் ஓர் உடன்பாடு காணப்பட்டு ஒப்பமிடப்பட வேண்டும். அதன் அடிப்படையில் மட்டுமே ஆதரவு வழங்க வேண்டும் – என்று கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ரெலோ வற்புறுத்துவது அவசியம் எனவும் நேற்று முடிவுசெய்யப்பட்டது.

ஐ.தே.முன்னணிக்கு ஆதரவு அளிப்பதற்கு என்னென்ன நிபந்தனைகள் விதிக்கப்படலாம் என்பது தொடர்பில் ரெலோவின் யோசனைகள் அடங்கிய ஆவணம் ஒன்றைக் கூட்டமைப்பு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ரெலோ சமர்ப்பிக்க வேண்டும் என்றும் –

அதுபோல, கூட்டமைப்பு ஒருங்கிணைப்புக் குழுவும் அவ்விடயத்தில் தான் விதிக்கக்கூடிய நிபந்தனைகளை எழுத்தில் ஐ.தே. முன்னணிக்கு சமர்ப்பித்து, அதனடிப்படையில் எழுத்து மூல உடன்பாடு ஒன்றைச் செய்து, அதன் பிரகாரம், ஆதரவை வழங்க வேண்டும் எனக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவைக் கோருவது என்றும் –

நேற்றைய ரெலோவின் மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த விடயத்தில் கட்சியின் சார்பில் தொடர் நடவடிக்கைகளைக் கையாளும் பொறுப்பையும் அதிகாரத்தையும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட ரெலோவின் அரசியல் குழுவிடம் கையளிக்கவும் மத்திய குழு நேற்று அங்கீகாரமளித்தது. (உ)

# பிரதமரையோ அரசையோ யாராலுமே மாற்றமுடியாது

## அடம் பிடிக்கிறார் எஸ்.பி. திசாநாயக்க



கொழும்பு, டிசெ. 02

அரசு எந்தத் தடையுமின்றித் தொடரும். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதமரையோ அரசையோ எவரும் மாற்ற முடியாது என அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

நீதிமன்றத் தீர்ப்பு தேர்தலுக்கு வழி வகுத்தால் அதில் ஆளும் கட்சி பெரும்பான்மை அரசு அமைப்பது உறுதி. கூட்டமைப்பு, மு.கா, ரிஷாத், திகாம்பரம் அணிகள் வீழ்ச்சி காண்பதுடன் மனோ கணேசன் ஒன்றுமில்லாமற்போவார். ஐ.தே.க பெரும் வீழ்ச்சியடையும் இ.தொ.கா மேலும் பலமடையும் என்றும் அமைச்சர் கூறினார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும்போதே அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலில் அடுத்த பொது வேட்பாளராகத் தம்மை வரித்துக் கொண்டே சபாநாயகர் கரு ஜயசூரிய சர்வாதிகாரமாகச் செயற்பட்டு வருகிறார். அது தொடர்பில் ஐ.தே.க பிரசாரங்களை முன்னெடுத்துள்ளது. ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைமையையும் பிரதமர் பதவியையும் தக்க வைத்துக்கொள்ளும் நோக்கிலேயே செயற்படுகிறார்.

எவ்வாறாயினும் தற்போதைய அரசு எவ்விதத்திலும் மாற்றமடையாது. அரசோ, அமைச்சரவையோ, பிரதமரோ மாற்றமடையப் போவதில்லை. வேறு ஒரு பிரதமரை நியமிக்கவும் முடியாது.

அரசு வெற்றிகரமாக தமது பயணத்தைத் தொடரும். நாம் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்த்துள்ளோம். தேர்தல் ஒன்றுக்கு வழிவகுக்கப்பட்டால் நாம் தேர்தலை எதிர்கொள்ளத் தயார். ஐ.தே.க. 65 ஆகக் குறையும். ரவூப் ஹக்கீமின் 7 பேர் 3 பேராகிவிடுவர். ரிஷாத் இரண்டையும், மனோ கணேசன் எதுவுமில்லாமற் போவார். திகாம்பரத்தின் 4 இரண்டாகக் குறையும், கூட்டமைப்பின் 16 பதின்மூன்றாகிவிடும். அதில் மூன்றை டக்ளஸ் தேவானந்தா பெற்றுவிடுவார். தொண்டமானுக்கு மேலும் பல சேரும். இதன் மூலம் எமக்குச் சிறந்த ஸ்திரமான அரசை உருவாக்க முடியும்.

தேர்தல் இல்லாவிட்டால் ஜனாதிபதி உருவாக்கிய அரசுடன் சபாநாயகர் விளையாடமுடியாது. அதை முறையாக நடத்த வேண்டியது அவரது பொறுப்பு– என்றார். (ஐ)

# எட்டு மாதக் குழந்தையை கிணற்றில்வீசினார்பெண்!

## புளியங்குளத்தில் சம்பவம்

வவுனியா, டிசெ. 02

வவுனியா - புளியங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ராஜ்புரம் பகுதியில் நேற்று முன்தினம் மபிற்பகல் 3 மணியளவில் கிணற்றிலிருந்து 8 மாதக் குழந்தையொன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் குழந்தையின் தாயார் அவரது மூத்த பிள்ளையுடன் காட்டுக்கு விறகு எடுப்பதற்காகக் குழந்தையை அவரது மாமியின் அரவணைப்பில் விட்டுச் சென்றுள்ளனர்.

மாலை வீடு திரும்பிய தாயார் குழந்தையைத் தேடியும் காணவில்லை. வீடு முழுவதும் சுற்றிப் பார்த்துவிட்டுக் கிணற்றுக்கு அருகே சென்று பார்வையிட்டவேளை குழந்தை கிணற்றில் சடலமாக மிதந்துள்ளது. இதனையடுத்து புளியங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணை முன்னெடுத்தனர்.

மாமியின் அரவணைப்பில் இருந்த சமயத்தில் அவர் குழந்தையை ஊஞ்சலில் போட்டு கிணற்றில் தூக்கி எறிந்துள்ளார் என ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்தமையையடுத்து 75வயதுடைய பெண்ணை (மாமி) பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர் சற்று மனநலம் பாதிக்கப்பட்டவர் என அயலவர்கள் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளைப் புளியங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அரசியல் குழப்பத்தால் ரூ. 1000 இற்கும் ஆப்பு!

## தொழிலாளர்கள் திண்டாட்டம்

கொழும்பு, டிசெ. 02

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்தால் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பான பேச்சும் இழுத்தடிப்புக்கு மத்தியிலேயே இடம்பெற்றுவருகின்றது. இதனால், மலையக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒன்றரை வருடங்கள் இழுத்தடிப்புக்குப்பின்னர்–சொற்ப அளவு சம்பள உயர்வோடு 2016 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தமானது கடந்த மாதம் காலாவதியானது. அதை புதுப்பிப்பதற்குரிய பேச்சுகள் இம்முறை முன்கூட்டியே ஆரம்பமாகியிருந்தாலும் இன்னும் எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை.

அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனம் மறுப்பு தெரிவித்துவருகின்றது. எனினும், விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்று கூட்டு ஒப்பந்தப் பேச்சில் கலந்துகொள்ளும் தொழிற்சங்கங்களும் விடாப்பிடியாக நிற்கின்றன.

கம்பனிகளுடன் பேசிப் பயனில்லை – வீதியில் இறங்கிப்போராடுமாறு தொழிலாளர்களுக்கு இ.தொ.கா. அறைகூவல் விடுத்தது. இதன்படி கடந்த திங்களன்று மனித சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், பிரதமரின் அவரசத் தலையீட்டையும் இ.தொ.கா. கோரியது. தற்போது பிரதமர் பதவியில் மாற்றம் வரவுள்ளது. தெற்கில் அரசியல் குழப்பமும் உச்சம் தொட்டுள்ளது. எனவே, அடுத்தாண்டு ஆரம்பத்திலேயே சம்பளப் பேச்சு நிறைவு பெறும் என்றும், எதிர்பார்க்கப்படும் தொகை கிடைக்குமா என்பது சந்தேகமே என்றும் தொழிற்சங்கப் பிரமுகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சம்பள உயர்வு இன்மையாலும், வாழ்க்கைச்சுமை அதிகரிப்பாலும் பெரும் சிரமத்துக்கு மத்தியிலேயே தொழிலாளர்கள் தீபாவளியைக் கொண்டாடினர். டிசெம்பர் மாதத்தில் பிள்ளைகளுக்குரிய பாடசாலை உபகரணங்களை வாங்க வேண்டியுள்ளது. இப்படிப் பல செலவுகள் இருப்பதால் தொழிலாளர்கள் திண்டாடிவருகின்றனர். (ஐ)

# ஹெரோய்னுடன் சிறுவன் கைது!



கொழும்பு, டிசெ. 02

இரத்மலானை பிரதேசத்தில், 2 கிராமும் 200 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோய்னுடன் 17 வயதுச்சிறுவனொருவன் நேற்றுக்கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸை பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே, இந்தச் சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சிறுவன், இரத்மலானைப் பிரதேசத்தைச் சேர்ந்தவரெனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஓட்டோக் கட்டணம் குறைக்கப்படுகிறது

கொழும்பு, டிசெ. 02

ஓட்டோக்களுக்கான ஆரம்பக் கட்டணம் (கட்டண மானி பொருத்தப்பட்டவை) 10 ரூபாவால் குறைக்கப்படுவதாக ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தப் புதிய கட்டண மாற்றம் இன்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருகிறது.

பெற்றோலின் விலை நேற்று முதல் குறைக்கப்பட்டதையடுத்து இந்தத் தீர்மானத்தை ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம் எடுத்துள்ளது.

தற்போது கட்டண மானியில் ஆரம்பக் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள 60 ரூபா என்ற வாடகை நிர்ணயம் இன்று நள்ளிரவு முதல் 50 ரூபாவாகக் குறைக்கப்படுகிறது என அந்தச் சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை தனியார் பஸ் சேவைகளின் கட்டணங்களைக் குறைப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ)

# எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் விழிப்புணர்வு

வவுனியா, டிசெ. 02

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் நேற்று விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

'ஒவ்வொருவரும் தனக்கு எச்.ஐ.வி. உள்ளதா எனப் பரிசோதனை செய்து அறிவதன் மூலம் 2025 ஆம் ஆண்டளவில் அதனை முற்றாக ஒழிக்கலாம்' என்னும் தொனிப் பொருளில் இந்த ஊர்வலம் நடைபெற்றது.

வவுனியா பொது வைத்தியசாலையின் மாவட்ட பாலியல் நோய் தடுப்புப் பிரிவின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற இவ் விழிப்புணர்வு ஊர்வலத்தை வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.கனீபா ஆரம்பித்து வைத்தார்.

வவுனியா பொது வைத்தியசாலையில் இருந்து ஆரம்பமான இந்த விழிப்புணர்வு ஊர்வலம் குருமன்காட்டுச் சந்தி, வைரவப்புளியங்குளம், வவுனியா நகரம் ஊடாக மீண்டும் வைத்தியசாலையைச் சென்றடைந்தது. (ஐ)

# பொலிஸாரின் சித்திரவதை தாங்க முடியாமல் இளைஞன் கழுத்தறுத்துத் தற்கொலை முயற்சி!

## தனக்கு நேர்ந்தவற்றை நீதிமன்றில் கண்ணீருடன் கூறினார்

யாழ்ப்பாணம், டிசெ. 02

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதைக்குள்ளான இளைஞன் கழுத்தை அறுத்துத் தற்கொலைக்கு முயற்சித்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தனக்கு நடந்த கொடுமைகளை அந்த இளைஞர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

சந்தேகநபரைப் பொலிஸார் சட்டவிரோதமாகத் தடுத்துவைத்திருந்தமை மற்றும் அவரைத் தாக்கியமை தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் கோப்பாய் பொலிஸாரைக் கண்டித்தார்.

கஞ்சா கலந்த சுருட்டுடன் நடமாடினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கோப்பாய் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர். அந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்கு விசாரணைக்குச் சந்தேகநபர் மன்றில் தோன்றத் தவறியதால் அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

பிடியாணை நடைமுறைப்படுத்திய கோப்பாய் பொலிஸார் சந்தேகநபரைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கைது செய்தனர். எனினும் திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகிய இரண்டு நாள்களும் பொலிஸார் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தவில்லை.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் சந்தேகநபர் முற்படுத்தப்பட்டார். அவரது கழுத்து மற்றும் கையில் பன்டேஜ் போடப்பட்டிருந்தது. நடப்பதற்கு கஷ்டப்பட்டுச் சந்தேகநபர் எதிரிக் கூண்டில் ஏறினார்.

சந்தேகநபரின் நிலை அறிந்த மன்று, என்ன நடந்தது? என்று கேள்வியெழுப்பியது.

"பொலிஸார் என்னைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர். கைது செய்த நாளிலிருந்து என்னைக் கடுமையாகத் தாக்கினார். தலைகீழாகத் தொங்கவிட்டு அடித்தார்கள். கையில் நெருப்பால் சுட்டார்கள். 3 நாள்களாக எனக்குப் பெரும் சித்திரவதை செய்தனர்.

பொலிஸாரின் சித்திரவதையைத் தாங்க முடியாமல் எனது கழுத்தை கூரிய ஆயுதத்தால் அறுத்துத் தற்கொலைக்கு முயற்சித்தேன். அதன்பின்னர்தான் என்னை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று சிகிச்சையளித்தனர் " – என்று சந்தேகநபர் கண்ணீர் விட்டு அழுதார்.

சந்தேகநபரால் கூறப்பட்டவை தொடர்பில் பொலிஸாரிடம் கேள்வி எழுப்பிய மன்று, அவர்களைக் கடுமையாக எச்சரித்தது. அத்துடன், சந்தேகநபர் விடுவிக்கப்பட்டு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## அரசியல் அடாவடித்தனம்

**எதிர்வரும் ஐந்தாம் திகதி மீண்டும் நாடாளுமன்றம் கூடும் போது நாடாளுமன்றத்தில் யாரிடம் பெரும்பான்மைப் பலம் உள்ளதோ அதனை இலத்திரனியல் வாக்கெடுப்பு மூலம் அல்லது ஒவ்வொரு பெயராக பெயர் குறிப்பிட்டு வாக்களிப்பதன் மூலம் நிரூபியுங்கள், அப்படிப் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும் தரப்பிடம் ஆட்சியை ஒப்படைக்கத் தயார்.**

**– இப்படி நேற்று முன்தினம் மாலையில் தன்னைச் சந்தித்த தமிழ்க் கூட்டமைப்புப் பிரதிநிதிகளிடம் திரும்பவும் கூறியிருக்கிறார் நாட்டின் தலைவரான ஜனாதிபதி சிறிசேன.**

**அதைத் தலையாட்டிக் கேட்டுக் கொண்டு வந்துள்ள கூட்டமைப்பினர் மீண்டும் நாடாளுமன்றத்தில் ஒரு வாக்கெடுப்புக்குத் தயாரகின்றனர் – ஏதோ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியாயம் செய்யத் தயாராகி விட்டார் என்ற நம்பிக்கையில். அல்லது அவர் நியாயம் செய்வதற்கு மீண்டும் ஒரு தடவை தாங்கள் சந்தரப்பம் அளித்தனர் என்ற தங்கள் தார்மீகக் கடப்பாட்டை நிறைவு செய்யும் நோக்கத்துடன்.**

**நல்லது. ஆனால் ஜனாதிபதியின் இந்த முடிவுக்குள் ஏதோ ஒரு சூத்திரம் பொதிந்திருப்பதாகவே தோன்றுகின்றது.**

**நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்தி உத்தரவிட்டுள்ள உயர்நீதிமன்றம் அடுத்த செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் அது தொடர்பான விசாரணைகளை நடத்தவிருக்கின்றது.**

**மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஆயத்தினால் தேர்தல் அறிவிப்புக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்ட நிலையில் ஏழு நீதியரசர்களைக் கொண்ட ஆயம் இந்த விடயத்தை இவ்வாரத்தில் விசாரிக்கின்றது. விசாரணை முடிந்த கையோடு நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

**அந்தத் தீர்ப்பு வரும் வரை, தாம் பிரதமராக நியமித்த மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிறுபான்மை அரசை வைத்துக் கொண்டே காலத்தை இழுத்தடிக்கப் பார்க்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால.**

**நாடாளுமன்றைக் கலைத்த தமது உத்தரவு சட்டரீதியானது எனத் தப்பித் தவறி உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்குமானால், மஹிந்த அரசையே காபந்து அரசாக நீடிக்க அனுமதித்தபடி தேர்தலை நடத்தலாம் என்ற நப்பாசை அவருக்கு. அதனால் உயர்நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை காலத்தை இழுத்தடிப்பது அவரது திட்டம்.**

**அதற்கான எத்தனங்களில் ஒன்றுதான் நாடாளுமன்றத்தில் அப்படித் தீர்மானத்தை நிறைவேற்றுங்கள், இப்படித் தீர்மானத்தைக் கொண்டு வாருங்கள் என்ற அவரது அளப்பு எல்லாம்.**

**மஹிந்த ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை என்பதைத் தாம் ஒப்புக்கொள்கின்றார் என இப்போது அவர் தமிழ்க்கூட்டமைப்பிடம் தெரிவித்திருக்கின்றார்.**

**இப்போதல்ல, கடந்த ஒக்டோபர் 26 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கிய நேரம் தொட்டு இப்போது வரை – இந்தக் கணம் வரை – அவரது அரசுக்குப் பெரும்பான்மை இல்லை என்பதும் –**

**மறுபுறத்தில், ஒக்டோபர் 26 வரை பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கே நாடாளுமன்றத்தில் தொடர்ந்தும் பெரும்பான்மை உள்ளது என்பதும் –**

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மட்டுமல்ல, இந்தத் தேசத்துக்கே தெரிந்த பரகசியம்தான்.**

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்கு எதிராக ஒன்றல்ல, இரண்டல்ல, ஐந்து தடவைகள் நாடாளுமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு விட்டன.**

**இரண்டு தடவைகள் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள். ஒரு தடவை பிரதமர் என்ற முறையில் அவர் ஆற்றிய உரையை நிராகரிக்கும் தீர்மானம். இன்னொரு முறை அவரது அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகளை வெட்டும் தீர்மானம். கடைசியாக முழு அமைச்சர்களுக்குமான நிதி ஒதுக்கீடுகளை வெட்டும் தீர்மானம்.**

**கூட்டமைப்பு ஊடாக ஜனாதிபதி வெளியிட்டிருக்கும் தகவலில் இன்னொரு வேடிக்கையும் உண்டு.**

***"நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபியுங்கள், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துகிறேன்"* – என்று கூறும் அவர் இதனை ஒக்டோபர் 26 இல் கடைப்பிடித்திருக்க வேண்டும்.**

**பிரதமராக நியமிப்பவரை பதவியேற்றதும் அவருக்கான பெரும்பான்மை ஆதரவை நாடாளுமன்றத்தில் நிரூபிக்கும் படி கோருவதுதான் ஜனநாயக மரபு.**

**போதிய பெரும்பான்மையுடன் ஆட்சி நடத்திக் கொண்டிருந்த பிரதமர் ரணிலை சத்தம் சந்தடியின்றி – வீட்டுக்கு அனுப்பிவிட்டு, பெரும்பான்மைப் பலத்தைப் பெறாத மஹிந்த ராஜபக்ஷவை பின் கதவால் பிரதமர் பதவிக்குக் கொண்டு வந்து ஆட்சியில் அமர்த்திவிட்டு, அவர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் காட்டத் தேவையில்லை என்று அடம் பிடிக்கும் ஜனாதிபதி மைத்திரிபால –**

**மஹிந்த அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் வெற்றிகரமாகப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னரும், இது சிறுபான்மை அரசு என்று கணிப்பிட்டு அதை வீட்டுக்கு அனுப்ப மறுத்துப் பிடிவாதம் செய்யும் ஜனாதிபதி சிறிசேன –**

**ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்குப் போதிய பெரும்பான்மை இருப்பது ஆதாரங்கள், கடிதங்கள் மூலம் நிரூபிக்கப்ட்ட பின்னரும், அந்தப் பெரும்பான்மையை நாடாளுமன்றில் வாக்கெடுப்பு மூலம் நிரூபியுங்கள், அதற்குப் பின்னர் அது குறித்துப் பார்ப்போம் என்று கூறுகின்றமை ஜனநாயகத்தின் பெயரால் நடக்கும் அரசியல் அடாவடித்தனமின்றி வேறில்லை.**

# முல்லைத்தீவில் புகைத்தலுக்கு அடிமையாகும் மாணவர்கள்!

## — சமூக ஆர்வலர்கள் கவலை —

முல்லைத்தீவு,டிசெ. 02

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் புகைத்தலுக்கு அடிமையாகும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துக்கொண்டே செல்வதாகக் கூறப்படுகின்றது.

அண்மையில் இவ்வாறு இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கட்ந்த 29 ஆம் செம்மலைப் பகுதியில் 14 வயது மாணவர்கள் கூட்டாக சேர்ந்து புகைத்தல் பழக்கத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இதனைக் கண்டித்த அதிபர், பெற்றோர்களை அழைத்து வருமாறு அனுப்பியுள்ளார். இந்நிலையில் தான் செய்தது பெற்றோருக்கு தெரிந்தால் அவமானம் என்று கருதிய கி.கிருசிகன் என்ற மாணவன் பாடசாலைச் சீருடையுடன்தற்கொலைசெய்துகொண்ட சம்பவம் பதிவாகியது.

கடந்த 29ஆம் திகதி வள்ளுவர்புரம் பாரதி மகா வித்தியாலயத்திலும் பாடசாலை நேரத்தில் மாணவர்கள் சிகரெட் புகைத்துள்ளனர். பாடசாலை அதிபர் பெற்றோர்களை அழைத்துக் கண்டித்துள்ளார்.

சிறுவர் நன்னடத்தைப் பிரிவினர் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் பாடசாலைச் சமூகத்திடம் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்கள் ஐந்து பேரே இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் பாடசாலையில் சிகரெட்டை வைத்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மாணவர்களை அதிபர் விசாரணை செய்து பெற்றோர்களை அழைத்து அவர்களுக்கு விடயத்தை எடுத்துரைத்தார்.

அதன் பின்னர் பெற்றோர்களிடம் மாணவர்களின் நல்லொழுக்கம் தொடர்பில் ஒப்புதல் கடிதம் ஒன்றை வாங்கிவிட்டுச் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இது குறித்து சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ஐ)

# வெடுக்குநாறிமலை ஆலயத்தை பாதுகாக்க டக்ளஸ் நடவடிக்கை



முல்லைத்தீவு, டிசெ. 02

தொன்மைவாய்ந்த வெடுக்குநாறிமலை ஆதி கோணேஸ்வரர் ஆலயத்தைப் புனரமைப்பதுடன் அங்கே மகா சிவராத்திரியை அனுஷ்டிக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க இந்து மத அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துவருவது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக வேந்தர் சி. பத்மநாதன் மற்றும் இந்துமதத் திணைக்களப் பணிப்பாளர் உமா மகேஸ்வரன் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

நேற்று அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடல்களில், வெடுக்குநாறிமலை ஆதி கோணேஸ்வரர் ஆலயத்தின் தொன்மையை பாதுகாக்கவும் அங்கே அடியார்களுக்கு வசதியாக படிக்கட்டுக்கள் அமைத்தல், பாதையைச் சீரமைத்தல், குழாய் கிணறுகளை அமைத்தல் என்பவற்றைச் செய்து சிவராத்திரி பூஜைகள் சிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை செய்வதுடன் தொல்பொருள் திணைக்களத்தின் தேவையற்ற தலையீடுகளைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

# கிளிநொச்சி சந்தைக்குள் பெரும் சுகாதாரச் சீர்கேடு




கிளிநொச்சி பொதுச் சந்தைக்குள் மனிதர்கள் செல்ல முடியாதளவுக்கு சில பகுதிகள் சுகாதாரச் சீர்கேடுகளுடன் காணப்படுவதாகச் சந்தை வர்த்தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதற்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.

கிளிநொச்சி சந்தையின் பழக் கடைத் தொகுதிக்கும் மரக்கறிக் கடை தொகுதிக்கும் இடையே உள்ள பகுதி மிகவும் மோசமான சுகாதாரச் சீர்கேடுகள் நிறைந்த பகுதியாகக் காணப்படுகிறது.

இது குறித்து கரைச்சிப் பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டு சென்றும் அவர்கள் அக்கறை செலுத்தவில்லை. மாதாந்தம் 1,240 ரூபா ஒவ்வொரு வர்த்தகர்களிடமிருந்தும் அறவிடுகின்றனர். ஆனால் அதற்குரிய சேவை இடம்பெறுவதில்லை என சந்தை வர்த்தகர்கள் விசனம் தெரிவித்தனர்.

கழிவகற்றல் மற்றும் இவ்வாறான சுகாதாரச் சீர்கேடுகள் தொடர்பில் பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டு சென்றால் சில நாள்களுக்கு தொடர்ந்தும் பணிகளை மேற்கொள்கின்றனர். பின்னர் பழைய நிலைக்குச் சென்றுவிடுகின்றனர் நாங்களும் ஒவ்வொரு தடவையும் இவ்வாறு கூறிக்கொண்டிருக்க முடியாது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் கம்சநாதனிடம் வினவியபோது இந்த விடயம் தொடர்பில் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தப் பகுதிக்கு கொங்றீட் இட்டு நிரந்தரமாகச் செப்பனிடவுள்ளோம். – என்றார். (ஐ)

**பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு செயற்பாடு**

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

16 2018

பெண்ணே! நீயும் ஒரு செய்திக்கு கதையாகமல்...
நீதிமன்றத்தில் ஒரு வழக்காகமல்... இன்றே கற்றுக்கொள்...
பெண்களுக்குகெதிரான வன்முறைகளிற்கெதிராக
முகம் கொடுப்பது எப்படி என்று...

யாழ் சமூக செயற்பாட்டு மையம்

JSAC

## நாளை

03.12.2018
திங்கட்கிழமை

நட்சத்திரம்: சித்திரை பி.இ 4.35 வரை
திதி : ஏகாதசி பி.ப 2.43 வரை
சுபநேரம் : 12.15 – 1.45 வரை
இராகுகாலம் : 7.45 – 9.15 வரை

# அனந்தியைப் பழிவாங்கும் தேவை எனக்குக் கிடையாது




## கூறுகிறார் வடக்கு அவைத் தலைவர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 02

வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரனை அரசியல் ரீதியாகப் பழிவாங்கும் நோக்கில் ஆளுநர் றெஜினோல்ட் குரேக்குக் கடிதம் எழுதவில்லை எனக் கூறிய வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம், அனந்தி சசிதரனைத் தான் கணக்கெடுப்பதே இல்லை என்றும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண ஆளுநரின் வைப்பிலிருந்து பெறப்பட்டு கூட்டுறவு அமைச்சுக்கு வழங்கப்பட்ட 3 கோடி 20 லட்சம் ரூபா நிதி சபையின் அனுமதி இல்லாமல் சட்டத்திற்கு முரணாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக உரிய விசாரணைகளை நடத்துமாறு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆளுநர் றெஜினோல்ட் குரேக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

இதற்கமைய விசாரணைக் குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவைத் தலைவரின் இந்தச் செயற்பாடு பொது நன்மை கருதியதா? அல்லது அனந்தி சசிதரனை அரசியல் ரீதியாகப் பழிவாங்குவதை இலக்காகக் கொண்டாதா? என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப்பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் ஊறுகையில் –

முன்னாள் ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியின் வைப்பில் இருந்து 14 கோடியே 40 லட்சம் ரூபா நிதி அடையாளம் காணப்பட்டு அந்த நிதி மீளப் பெறப்பட்டு சகல அமைச்சுக்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. அவ்வாறு பகிரப்படும்போது அந்த நிதியை மக்களுக்கு வழங்குவது தொடர்பாகவும், அந்த நிதியைப் பெறப் போகும் பயனாளிகள் தொடர்பாகவும் சபை அங்கீகாரம் பெற வேண்டும் எனவும் கூறப்பட்டது.

அதற்குக் காரணம் அந்த நிதி வரவு – செலவுத் திட்டத்திற்குள் அடங்காத நிதி. ஆகவே அந்த நிதிச் செலவீடு தொடர்பாகச் சபையின் அங்கீகாரம் பெற வேண்டியது சட்டம். அவ்வாறிருக்கையில் கூட்டுறவு அமைச்சு தவிர்ந்த மற்ற அமைச்சுக்கள் அனைத்தும் சட்ட ரீதியாகத் தமக்கு வழங்கப்பட்ட நிதியைச் சபையின் அங்கீகாரத்துடன் மக்களுக்காகச் செலவிட்டுள்ளன.

ஆக கூட்டுறவு அமைச்சு மட்டும் சபையின் அங்கீகாரம் இல்லாமல் அந்த நிதியைச் செலவிட்டுள்ளது. அதுவும் சபையின் அங்கீகாரம் பெறவேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டும் சட்டத்திற்கு மாறாகச் செயற்பட்டுள்ளார்கள். ஆகவே அது தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடக்கூடாது. எதிர்காலத்தில் அமையும் மாகாண சபையிலாவது இவ்வாறான பிழைகள் நடந்துவிடக்கூடாது என்பதற்காக ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டு சென்றேனே தவிர அனந்தி சசிதரனை அரசியல் ரீதியாகப் பழிவாங்கும் எண்ணமோ தேவையோ எனக்குக் கிடையாது.

அப்படி எண்ணம் இருந்திருக்குமானால் ஆளுநருக்குக் கடிதம் வழங்கியவுடனேயே ஊடகங்களைச் சந்தித்துப் பேசியிருப்பேன். ஆனால் நான் அவ்வாறு எதையும் செய்யவில்லை. மாறாக ஊடகங்களே என்னைத் தொடர்புகொண்டு கேட்டிருந்தன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக அனந்தி சசிதரனை நான் கணக்கெடுப்பதே இல்லை – என்றார். (ஐ – 07)

# தமிழ்த் தரப்புக்களிடம் இன்று மண்டியிடும் தேசிய கட்சிகள்

## ரூபா 50 கோடி வரை பேரம் பேசினார்கள் என்கிறார் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா எம்.பி.



தமிழ்த் தரப்புக்களிடம் மண்டியிடும் நிலையில் தேசியக் கட்சிகள் உள்ளதாகவும், 6 கோடி முதல் 50 கோடிவரை தன்னிடம் பேரம் பேசினார்கள் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கூழாமுறிப்புப் பகுதியில் போரால் பாதிப்புக்களுக்குள்ளான பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான பண்ணை கையளிப்பு வைபவம் நேற்று நடந்தது. இதில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந் தராஜாவிடம், உங்களிடம் எவ்வளவு பேரம் பேசப்பட்டது என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் அரசியல் வரலாற்றிலே சிறுபான்மை இனம் என்று தமிழர்களை ஓரங்கட்டிய சிங்கள அரசியல்வாதிகள் இன்று தமிழினத்திடம் மண்டியிடுகின்ற ஒரு நிலை வந்துள்ளது. இவ்வாறு ஒரு நிலை ஏற்படும் என்று மஹிந்த நினைத்திருப்பாரா? இது அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்கின்றதை உண்மைப்படுத்துகின்ற ஒரு நிகழ்வாகவே நாம் பார்க்கிறோம்.

தமிழினம் தங்களுக்குத் தேவையில்லை. அவர்கள் சிறுபான்மை இனம் என்று ஓரங்கட்டி வைத்திருந்த தேசியக் கட்சிகள் அனைத்துமே இன்று தமிழர்களையே நம்பியிருக்கின்றன. இந்தத் தமிழர்கள் ஆணையிட்டு அனுப்பி வைத்திருக்கும் கூட்டமைப்பை நம்பியே அவர்கள் இன்று ஆட்சிப்பீடம் ஏறவேண்டிய நிலை வந்துள்ளது.

தமிழினம் அவர்களுக்கு அடிமையாகாது. கூட்டமைப்பு என்றும் மக்களோடு இணைந்து மக்களை ஏமாற்றாத வகையில் பயணிக்கும் என நான் ஆணித்தரமாகக் கூறுகின்றேன்

ஏனைய உறுப்பினர்களிடம் எவ்வளவு பேரம் பேசப்பட்டது என எனக்குத் தெரியாது. ஆனால் என்னிடம் 6 கோடி முதல் 50 கோடி ரூபா வரை பேரம் பேசப்பட்டது – என்றார். (ஐ)

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பண்ணை

முல்லைத்தீவு, டிசெ. 02

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கூழாமுறிப்புப் பகுதியில் போரால் பாதிப்புக்களுக்குள்ளான பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான ஒருங்கிணைந்த பண்ணை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட கூழாமுறிப்புப் பகுதியில் இரண்டரை ஏக்கர் காணியைப் பெற்றுக்கொண்ட சப்தமி பெண்கள் அமைப்பு அதில் கனடா செந்தில் குமரன் நிவாரண அமைப்பின் பத்து இலட்சத்து 26ஆயிரத்து 500 ரூபா செலவில் ஒருங்கிணைந்த பண்ணை ஒன்று அமைப்பதற்கான முதற்கட்ட வேலைகளை நிறைவு செய்துள்ளது.




இந்த வேலைத்திட்டத்தைக் கனடா செந்தில்குமரன் நேற்று அந்தப் பகுதிக்குச் சென்று சப்தமி பெண்கள் அமைப்புக்கு உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்

இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் சத்தியசீலன், சப்தமி பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.(ஐ)

# பார்வையிழந்த முன்னாள் போராளிகள் வடமாகாண ஆளுநரை சந்தித்துப் பேச்சு



யாழ்ப்பாணம், டிசெ. 02

யுத்தத்தில் கண்பார்வை இழந்த முன்னாள் போராளிகள் ஆளுநர் றெஜினோல்ட் குரேயைச் சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் சந்தித்து நேற்று முன்தினம் கலந்துரையாடியுள்ளனர்.

அரச வேலைக்கான ஆட்சேர்ப்பின்போது 3 சதவீதமானவர்கள் மாற்றுத்திறனாளிகள் இணைத்துக் கொள்ளப்படவேண்டிய கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தம்மையும் அரச வேலை வாய்ப்புக்களில் இணைத்துக் கொள்ளுமாறு அவர்கள் ஆளுநரிடம் வேண்டிக்கொண்டனர்.

குறிப்பாக கரைச்சி பிரதேசசபை நூலகம் மற்றும் வவுனியா நகர சபை நூலகங்களில் தம்மை போன்றவர்களுக்கான விசேட பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளபோதும் அது பயன்படுத்தப்படாது மூடி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறிய அவர்கள், அதில் தம்மைப் பணிக்கு அமர்த்துமாறு வேண்டிக்கொண்டனர். அதற்கான பயிற்சிகளைத் தாம் எடுத்துள்ளதாகவும் அதனைத் தம்மால் திறம்படச் செய்ய முடியும் எனவும் குறிப்பிட்டனர்.

இதுபோன்று யாழ். பல்கலைக் கழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான பயிச்சி வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாக தாம் அறிவதாகவும், அதில் பயிற்சியாளர்களாகச் செயற்படக்கூடிய வகையில் சிறப்புத் தன்மைகளைத் தாம் கொண்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இவர்களின் கோரிக்கையைச் செவி மடுத்த ஆளுநர், நிச்சயமாக குறிப்பிட்ட நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தித் தகவல்களை திரட்டி வெற்றிடத்திற்கு உங்களை போன்றவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக அவர்களிடம் உறுதியளித்தார்.

(ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# அமெ. விமானத் தாக்குதலில் ஆப்கனில் 23 பொதுமக்கள் சாவு!

## ஐ.நா. கடும் கண்டனம்



நியூயோர்க், டிசெ. 02

ஆப்கானிஸ்தானில் கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்க விமானப் படையால் நடத்தப்பட்ட தாக்குதலில் 23 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் அதில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் எனவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஹெல்மண்ட் மாகாணத்தில் ஆப்கன் மற்றும் அமெரிக்கப் படைகள் இணைந்து நடத்திய கூட்டு நடவடிக்கையின்போதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் பத்து சிறுவர்களும் எட்டுப் பெண்களும் கொல்லப்பட்டுள்ளனர் என விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக அமெரிக்கப்படைகள் தெரிவித்துள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வான்வழித்தாக்குதல் அமெரிக்க ஆதரவு பெற்ற ஆப்கானியச் சிறப்பு படைகளுக்கும் தலிபான் போராளிகளுக்குமிடையில் கர்ம்சீர் மாவட்டத்தில் நடைபெற்ற சண்டையின் ஒரு பகுதியென ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படை தெரிவித்துள்ளது. (ஐ)

# அமெ.யில் வெள்ளியன்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

## வீதிகள் பிளவடைந்து போக்குவரத்து பாதிப்பு



நியூயோர்க், டிசெ. 02

அமெரிக்காவின் அலஸ்கா மாநிலத்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தை அடுத்து மாநிலத்தின் கரையோரப் பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், சில மணி நேரங்களின் பின்னர் சுனாமி எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை 7.0 ரிச்டர் அளவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தை அடுத்து மக்கள் அச்சத்தில் கட்டடங்களில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இந்நிலநடுக்கத்தினால் உயிர் சேதங்கள் எதுவும் பதிவாகாத போதிலும், பல பொருட்சேதங்கள் பதிவாகியிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிலநடுக்கத்தின் எதிரொலியாக அலஸ்கா மாநிலத்தில் வீதிகளில் பெரிய பிளவுகள் ஏற்பட்டுள்ளமையால், போக்குவரத்து பெரி தும் பாதிக்கப்பட்டுள்ளது.

சுமார் 3 இலட்சம் மக்கள் வசிக்கும் அங்கரேஜ் மாநகரிலிருந்து வடக்காக 11 கிலோமீற்றர் தூரத்தில் 40.9 கிலோமீற்றர் ஆழத்தில் இந்நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (ஐ)



# சர்வதேச எயிட்ஸ் தினத்தை குறிக்கும் ஆயிரம் பலூன்கள்!

றியோடிஜெனிரோ, டிசெ. 02

பிரேசிலின் பொருளாதார தலைநகரான சாவோ பாவ்லோவில் ஆயிரத்திற்கும் அதிகமாக ஹிலியம் பலூன்கள் பறக்க விடப்பட்டன.

நேற்றுச் சனிக்கிழமை உலகளவில் நினைவு கூரப்படும் எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நோக்கில் ஆயிரக்கணக்கான பலூன்கள் வானில் பறக்கவிடப்பட்டன.

அண்மைக்காலமாக புதிய நோய்த் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக எமிலியோ ரிபாஸ் ஆய்வுக் கூடத்தின் பணிப்பாளர் லுயிஸ்கார்லோஸ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நோய் காவிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதன் காரணமாக புதிய நோய்த் தொற்றாளர்களின் இரு பாலாரின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது.

இதன் காரணமாக, ஓரினச் சேர்க்கை சமூகங்கள், பெண்கள் அமைப்புகள் என்பன தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தப் படுவதுடன், அதுபற்றி விவாதத்தில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான விழிப்புணர்வுகள் ஊடாக எச்.ஐ.வி.யின் பாதிப்பு அதிகரிப்பதைச் சிறிது சிறிதாகத் தடுக்க முடியும் என்ற கருத்தில், தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் பிரேசிலின் எமிலியோ ரிபாஸ் ஆய்வு கூடத்திற்கு முன்பாக விழிப்புணர்வு பலூன்கள் பறக்கவிடப்பட்டமையுடன், பலசமூக ஆர்வலர்களும் இதில் கலந்து கொண்டனர். (ஐ)

# சின்னம்மை நோயின் தாக்கம் உலகம் முழுவதும் அதிகரிப்பு




வொஷிங்டன், டிசெ. 02

சர்வதேச ரீதியாக மீண்டும் சின்னம்மை நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

2017 ஆம் ஆண்டில் சின்னம்மை நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் 67 இலட்சம் பேருக்கு சின்னம்மை நோய் தொற்று ஏற்பட்டு இருந்தது.

இவர்களில் பெரும்பாலானோர் இளம் பிள்ளைகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் நோய் தாக்கத்துக்கு உள்ளான ஒரு இலட்சத்திற்கும் மேலானோர் உயிரிழந்தனர்.

சின்னம்மை நோயை முற்றாக இல்லாதொழிக்கும் முயற்சியில் முன்னேற்றம் தென்பட்டாலும் இந்த முன்னேற்றம் கடந்த வருடம் பின்னோக்கி திரும்பியிருப்பதாக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

தடுப்பு மருந்தேற்றலில் நிலவும் குறைபாடுகள் இதற்குக் காரணமாகும் என்றும் ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# சீனியர் ஜோர்ஜ் புஷ் மறைவு

நியூயோர்க், டிசெ. 02

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோர்ஜ் எச்.டபிள்யூ புஷ் காலமானார் என்று அவரின் மகன் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அறிவித்துள்ளார். அவருக்கு வயது 94



ஜோர்ஜ்புஷ்சீனியர் என்று அறியப்படும் அவர் கடந்த வெள்ளிக்கிழமை உள்ளூர் நேரப்படி 22:10 மணிக்கு காலமானார், என அக்குடும்பத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

எட்டு மாதங்களுக்கு முன்பு தான் ஜோர்ஜ் எச். டபிள்யூ புஷ்ஷின் மனைவி பார்பாரா காலமானார்.

அன்பிற்குரிய எங்கள் தந்தை 94 ஆண்டுகள் வாழ்ந்து, தற்போது இறந்துவிட்டார் என்ற செய்தியை ஜெப், நீல், மார்வின், டொரோ மற்றும் நான் வருத்தத்துடன் அறிவிக்கிறோம் என் 43ஆவது அதிபராக இருந்த ஜோர்ஜ் புஷ் ஜூனியர் அறிக்கை வெளியிட்டுள்ளார். (ஐ)




# ரஷ்ய ஆண்கள் நாட்டுக்குள் நுழைவதற்கு உக்ரைன் தடை

கிவி, டிசெ. 02

மொஸ்கோ உக்ரைன் மீது படையெடுப்பு நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக அச்சம் வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து 16 வயது முதல் 60 வயதிற்குட்பட்ட ரஷ்ய ஆண்கள் தமது நாட்டிற்குள் நுழைவதற்கு உக்ரைன் தடை விதித்துள்ளது.

ரஷ்யர்களை தமது நாட்டில் தனிப்படைகள் உருவாக்குவதை தடுக்கும் நோக்குடன் இக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ பொரோஎன்கோ தெரிவித்துள்ளார்.

மேலும் ரஷ்யப் பீரங்கிகள் தமது நாட்டின் எல்லையில் முற்றுகையிட்டுள்ளதற்கான ஆதாரங்கள் தம்மிடமுள்ளன என்றும் உக்ரேனிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

2014ஆம் ஆண்டில் மொஸ்கோவால் கைப்பற்றப்பட்ட கிரைமியா தொடர்பாக இரண்டு நாடுகளுக்குமிடையே நீண்ட காலமாக இடம்பெற்று வந்த மோதல் இவ்வார ஆரம்பத்தில் விரிவடைந்ததையடுத்து உக்ரேனில் இராணுவச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இச்சட்டத்தின் ஒரு பகுதியாகவே ரஷ்ய ஆண்களுக்கான கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஒரு லட்சத்து இருபதாயிரம் பேருக்கு இந்தியாவில் பதின்ம வயதில் எயிட்ஸ்

## யுனிசெவ் அறிக்கையில் திடுக்கிடும் தகவல்



2017 ஆம் ஆண்டு கணக்கின்படி இந்தியாவில் எயிட்ஸ் நோய்க்குக்காரணமான எச்.ஐ.வி. வைரஸால் பாதிக்கப்பட்டு, 19 வயதுக்குட்பட்டோர் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் வாழ்ந்து வருகின்றனர். தெற்காசியாவில் இது மிக அதிகபட்சம் என்று யுனிசெவ் என்றழைக்கப்படும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

அதேசமயம் இந்த அளவைத் தடுக்காவிட்டால், 2030 ஆம் ஆண்டுக்குள் எயிட்ஸ் நோயால் நாள் ஒன்றுக்கு உலக அளவில் 80 பேர் உயிரிழப்பார்கள் என்றும் யுனிசெவ் எச்சரித்துள்ளது.

யுனிசெவ் அமைப்பு, குழந்தைகள், எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ்: 2030 இல் உலகம் என்ற தலைப்பில் ஆய்வு செய்து நேற்று முன்தினம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

2017- ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 19 வயதுக்குட்பட்ட குழந்தைகள், பதின்மவயதினர் எச்.ஐ.வி. வைரஸ்கிருமியால் பாதிக்கப்பட்டு ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் வாழ்ந்து வருகின்றனர். இது தெற்கு ஆசியாவில் இந்தியாவில்தான் அதிகமாகும்.

இந்தியாவைத் தொடர்ந்து பாகிஸ்தானில் 5,800 பேரும், நேபாளத்தில் 1,600 பேரும், வங்கதேசத்தில் ஆயிரத்துக்கும் குறைவாகவும் வாழ்கின்றனர்.

2017ஆம் ஆண்டில் எச்.ஐ.வி. வைரஸ் பாதிப்பு உள்ள 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் கண்டுபிடிக்கப்பட்ட அளவு கடந்த 2010 ஆம் ஆண்டோடு ஒப்பிடும் போது குறைந்து இருக்கிறது. உலக அளவில் 35 சதவீதம் குறைந்திருக்கிறது.

14வயதுக்குட்பட்ட குழந்தைகளை எச்.ஐ.வி. வைரஸ் பாதிப்பு ஏற்பட்டு, அதற்கான சிகிச்சை எடுத்துக்கொண்டு வாழ்பவர்கள் கடந்த 2017 ஆம் ஆண்டில் 73 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது கடந்த 2010ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது, 50 சதவீதம் அதிகரித்துள்ளது.

எச்.ஐ.வி.பரவுவதை தடுக்கும் முயற்சிகளை நாம் தீவிரப்படுத்தாவிட்டால், 2030 ஆம் ஆண்டுக்குள் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு உலக அளவில் 80 பேர் உயிரிழப்பார்கள். இப்போதுள்ள அறிக்கையின்படி, எய்ட்ஸ் தொடர்பான உயிரிழப்புகள், புதிய தொற்றுகள் பரவுவது குறைந்துள்ளன. ஆனால், தாக்கத்தின் குறைவு எதிர்பார்த்த அளவுக்குக் குறையவில்லை.

5 வயதை அடையாமலேயே பெரும்பாலான குழந்தைகளை எய்ட்ஸ் நோயால் உயிரிழந்து வருகின்றனர். கருவுற்ற தாய்கள் மூலம் குழந்தைகளுக்கு எய்ட்ஸ் பரவுவது, அதைத்தடுக்கும் வழிமுறைகள் இன்னும் வேகப்படுத்தப்படவில்லை. அதேசமயம், கடந்த 8 ஆண்டுகளாக இதைத் தடுக்கும் முறைகளால் நோய் பரவும் அளவு 40 சதவீதம் குறைந்துள்ளது.

வரும் 2030ஆம் ஆண்டுக்குள் உலகளவில் எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையை 14 லட்சமாகக் குறைக்க இலக்கு வைக்கப்பட்டுள்ளது, தற்போது 19 லட்சமாக அது இருக்கிறது.

2030 ஆம் ஆண்டுக்குள் குழந்தைகள் மற்றும் பதின்ம வயதினரிடையே எயிட்ஸ் நோய் முடிவுக்கு வந்துவிடும் என்று இந்த அறிக்கை சந்தேகமின்றிக் கூறுகிறது என்று யுனிசெவ் தலைவர் ஹென்ரிட்டா போர் தெரிவித்துள்ளார்.

# இரண்டு முக்கிய முத்தரப்பு பேச்சுகளில் பங்கு கொண்டார் இந்தியப் பிரதமர் மோடி

## ஒருபுறம் அமெரிக்கா, ஜப்பானுடன்; மறுபுறம் சீனா மற்றும் ரஷ்யாவுடன்!



பன்னிரண்டு ஆண்டுகளின் பின்னர் இந்தியா,ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் இடையே முத்தரப்பு பேச்சு வார்த்தை நடைபெற்றது.

ஆர்ஜென்டீனா நாட்டின் தலைநகர் புவனஸ் அயர்ஸ் நகரில் நடைபெற்றுவரும் ஜி-20 உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக, ஆர்ஜென்டீனா சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, சவுதி அரேபியா பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் உள்ளிட்ட உலக தலைவர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

பின்னர், ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஆகியோருடன் முத்தரப்பு ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனை தொடர்பாக கருத்து வெளியிட்ட பிரதமர் மோடி, ஜப்பான், அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் பெயர்களில் உள்ள முதல் எழுத்துகளை குறிப்பிட்டு 'JAI' என்றால் இந்தியில் வெற்றி என்று அர்த்தம் என தெரிவித்திருந்தார்.

இந்த ஆலோசனைக்கு பிறகு சீன அதிபர் ஜி ஜின்பிங் மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் ஆகியோருடன் மற்றொரு முத்தரப்பு பேச்சுக்களில் மோடி பங்கேற்றார். RIC என்றழைக்கப்படும் ரஷ்யா, இந்தியா, சீனா நாட்டின் இந்த கூட்டமைப்பின் சார்பில் கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்னர் முதல் பேச்சு நடைபெற்றது.

அதன் பின்னர் மூன்று நாட்டு தலைவர்களும் முத்தரப்பு பேச்சுகளில் பங்கேற்று ஆலோசிக்காத நிலையில், 12 ஆண்டுகளுக்கு பின்னர் தற்போது நடந்துள்ள இந்த பேச்சு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

# காங்கிரஸ் கட்சியின் தெலுங்கானா மாநில தலைவரானார் கிரிக்கெட் வீரர் அஸாருதீன்

தெலுங்கானா மாநில காங்கிரஸ் செயல் தலைவராக முன்னாள் கிரிக்கெட் வீரர் முகமது அஸாருதீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான முகமது அஸாருதீன் காங்கிரஸ் கட்சியில் இணைந்து எம்.பியானார். 2009 ஆம் ஆண்டில் உத்தரப் பிரதேச மாநிலம் மொராதாபாத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஆனால் 2014 ஆம் ஆண்டு ராஜஸ்தான் மாநிலத்தில் மதோபூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார்.



இருப்பினும் அஸாருதீன் தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தைச் சேர்ந்தவர். வரும் 2019 ஆம் ஆண்டு செகந்திராபாத் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட அவர் விரும்புகிறார். இந்தநிலையில் தெலுங்கானா மாநில காங்கிரஸ் செயல்தலைவராக அஸாருதீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியின் ஒப்புதலுடன் அவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனக் கட்சியின் பொதுச் செயலாளர் அசோக் கெலாட் அறிவித்துள்ளார். இது மட்டுமின்றி தெலுங்கானா மாநில காங்கிரஸ் நிர்வாகிகள் பலரும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

தெலுங்கானா மாநிலத்தில் டிசம்பர் 7ஆம் திகதி சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

# ரயில் எஞ்சினை ஜப்தி செய்ய வந்த நீதிமன்ற அதிகாரிகள்!

## காஞ்சிபுரம் ரயில் நிலையத்தில் பரபரப்பு

காஞ்சிபுரத்துக்கு வந்த திருப்பதி, புதுச்சேரி ரயில் எஞ்சினை நீதிமன்ற உத்தரவின் பேரில் ஜப்தி (பறிமுதல் செய்யும்) நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டமையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பயணிகளும் பரிதவித்தனர்.

காஞ்சிபுரம் ரயில் பாதையை அகலப்பாதை வழித்தடமாக மாற்றக் கடந்த 1999ஆம் ஆண்டில் நிலம் கையகப்படுத்தப்பட்டது. அப்போது, , காஞ்சிபுரம் பாலுசெட்டிசத்திரத்தைச் சேர்ந்த மும்தாஜ் பேகம், அப்துல் ரஷீத் ஆகியோருக்குச் சொந்தமான நிலத்தை மாவட்ட நிர்வாகம் கையகப்படுத்தி, தென்னக ரயில்வே வசம் ஒப்படைத்தது.

இதற்காக, சம்பந்தப்பட்டவர்களுக்கு அப்போதைய நில வழிகாட்டல் மதிப்பீட்டு வழங்கப்பட்ட இழப்பீட்டுத்தொகை போதுமானதாக இல்லை, கூடுதலாக இழப்பீட்டுத் தொகை கேட்டு, காஞ்சிபுரம் சார்பு நீதிமன்றத்தில் அவர்கள் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், பாதிக்கப்பட்டவர்களுக்குக் கூடுதல் இழப்பீட்டு வழங்கத் தீர்ப்பளித்தது.

ஆனால், மாவட்ட நிர்வாகம் இது தொடர்பாக எவ்வித பதிலையோ இழப்பீட்டையோ அளிக்கவில்லை.



அதைத் தொடர்ந்து, மனுதாரர், இழப்பீட்டுத்தொகையை விரைந்து வழங்குமாறு உத்தரவிடக் கோரி கோரி மனுத்தாக்கல் செய்தார்.

அதன்பேரில், இழப்பீட்டுத் தொகை தராததால் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரின் வாகனங்கள் மற்றும் புதுச்சேரி- திருப்பதி ரயிலின் என்ஜின் ஆகியவற்றை ஜப்தி செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து, நீதிமன்ற ஊழியர்கள் நேற்று முன்தினம் காலை காஞ்சிபுரம் புதிய ரயில் நிலையத்துக்கு வந்தனர். அப்போது, திருப்பதியிலிருந்து புதுச்சேரிக்கு செல்லும் ரயில் காலை வந்தடைந்தது.

அந்த ரயிலின் என்ஜினை ஜப்தி செய்ய நீதிமன்ற ஊழியர்கள், ரயில் நிலைய மேலாளர், ரயில் ஓட்டுநரிடம் உரிய உத்தரவு நகலை அளித்தனர். இதை அறிந்த ரயில் பயணிகள் அதிர்ச்சியும், கலக்கமும் அடைந்தனர்.

ஆனால், வருவாய்த்துறை அதிகாரிகள் மனுதாரரைத் தொடர்புகொண்டு ஒருசில நாள்களில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுவிடும் எனஉறுதியளித்து, ரயில் எஞ்சின், மாவட்ட ஆட்சியரின் கார் உள்ளிட்டவற்றை ஜப்தி செய்ய வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார்.

இதனால், மனுதாரர் வழக்கறிஞர், நீதிமன்ற அதிகாரிகள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர். இதனால், காஞ்சிபுரம் ரயில்நிலையத்தில் ஒரு மணிநேரம் பரபரப்பான சூழல் நிலவியது.

## திருவருகைக்கால செய்தி

இன்றைய உலகின் கண்ணோட்டத்தைக் கொண்டு இயேசுவின் வாழ்வை நோக்கும்போது இயேசுவை தோல்வியடைந்தவர் என்றே சொல்லத்தோன்றுகிறது என அனைத்துலக கத்தோலிக்க காரித்தாஸ் அமைப்பின் தலைவர் கர்தினால் லூயிஸ் அந்தோனியோ தாக்லே அவர்கள் கூறியுள்ளார். அண்மித்து வரும் திருவருகைக் காலத்தையொட்டி அவர் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த கிறிஸ்மஸ் காலத்தில் உள்ளங்களை விரிவாக்கி அனைவரோடும் பயணத்தைப் பகிர்வதற்கு நாம் தயாராக இருப்போமாக என்கிறார்.

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## அன்னை மரியாவும் அவரது கணவர் யோசேப்பும் புலம்பெயர்ந்தோராக பயணித்தனர்

அன்னைமரியாவும் அவரது கணவர் யோசேப்பும் புலம்பெயர்ந்தோராக பயணித்தனர் என்பதை தன்மடலில் குறிப்பிட்டுள்ள கர்தினால் தாக்லே அவர்கள் திருக்குடும்பத்தின் பயணத்தில் பங்கேற்க வேண்டுமெனில் தற்போது புலம்பெயர்ந்தோர் மேற்கொள்ளும் கடுமையான பயணங்களில் பங்கேற்போமாக. இயேசுவின் வாழ்வு தோல்வியுற்றவர் ஒருவரின் வாழ்வாகத் தோன்றினாலும் வாழ்வின் விளிம்பில் வாழ்வோரையும் காண்பதற்கு அவர் பாடங்களைச் சொல்லித் தருகிறார் என்கிறார்.

# கிறிஸ்தவ கற்கைகள் பற்றிய பன்னாட்டு மாநாடு




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறை யாழ். திருமறைக்கலாமன்றத்தின் அனு சரணையுடன் ஒழுங்கமைக்கும் புதிய தோர் கிறிஸ்தவ மனிதநேயப் பண் பாட்டை நோக்கி கிறிஸ்தவ கற்கைகள் பற்றிய பன்னாட்டு மாநாடானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் டிசெம்பர் 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை தலைவர் கலாநிதி ஜே.சி. போல் றோகான் அடிகளார் இந்த புதியதோர் கிறிஸ்தவமனிதநேயப்பண்பாட்டைநோக்கி கிறிஸ்தவ கற் கைகள் பற்றிய பன்னாட்டு மாநாடு பற்றி 'காலைக்கதிர்' கிறிஸ்தவ செய்தி இதழுக்குத் தெரிவிக்கும் போது இந்த ஆய்வு மாநாடானது இன்றைய உலகைத் தீராது ஆட்டிப்படைக்கும் பல பிரச்சினைகளுடன், ஏழ்மை, அநீதி, ஊழல், பூகோளமயமாதலின் தீய விளைவுகள், கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சூழல் சார் சவால்கள் உள்ளடங்கலான பிரச்சினைகளின் மத்தியிலும், ஒரு புதிய மனிதநேயப் பண்பாடு ஒன்றைக் கட்டியெழுப்பும் தமது மானுட மற்றும் சமூகப் பொறுப்புக்களைக் கிறிஸ்தவர்கள் மேலும் வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை முன்மொழிவதையும், அவர்கள் தங்கள் உள்ளூர் சூழலில் மானுடவிழுமியங்களை அடித்தளமாக கொண்ட புதிய பண்பாடு ஒன்றைக் கட்டியெழுப்ப மேற்கொண்டு வரும் முயற்சிகளை விஞ்ஞான பூர்வமான அறிவியல் முறைசார் ஆய்வுகளினூடாக ஆவணப்படுத்துவதற்கான தளம் ஒன்றை வழங்குவதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

புதிய மனிதநேயப் பண்பாட்டுக்கான பங்களிப்பை வழங்குவது இங்கு கிறிஸ்தவர்களின் ஒரு சமூகப் பொறுப்புணர்வின் வெளிப்பாடாகவே கருதப்படுகிறது. இவ்வாய்வரங்கானது ஏனைய சமய நம்பிக்கையாளர்களையும் ஒன்றிணைத்து அனைவராலும் பகிரப்படும் மானுட விழுமியங்களை அடித்தளமாகக் கொண்ட ஒரு சிறந்த சமுதாயத்திற்காக குரல் கொடுப்பது மற்றும் உழைப்பது தொடர்பான விழிப்புணர்வையும் அதிகரிக்கும்.

மேலும் இவ்வாய்வரங்கு கிறிஸ்தவர்களும், ஏனைய சமய நம்பிக்கையாளர்களும் தமக்குப் பொதுவாக உள்ள சமூகப் பொறுப்பு சார்ந்த விட யங்களில் எவ்வாறு ஒன்றிணைந்து ஈடுபட்டு ஒரு புதிய மனிதநேயப் பண்பாட்டை உருவாக்க முடியும் என்பதற்கான வழிவகைகளையும் ஆராயும் என்றார்.

# சில்லாலைப் பங்கில் இளையோர் தினம்



சில்லாலை பங்கு இளையோர்களின் இளையோர் தினம் சில்லாலை பங்குத் தந்தை ஏ.அகஸ்ரின் அடிகளாரின் நெறிப்படுத்தலில் 28 ஒக்ரோபர் 2018 அன்று நடைபெற்றது. சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் காலை இளையோர் மன்ற கொடியேற்றலுடன் ஆரம்பமாகிய நிகழ்வுகள் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அன்ரன் ஸ்ரிபன் அடிகளார் தலைமையிலான இளையோர் தின சிறப்புத் திருப்பலியுடன் தொடர்ந்தது. காலையில் இளையோருக்கான விளையாட்டு நிகழ்வுகளும் மாலையில் இளையோர் சிறப்பிக்கும் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

கலை நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அன்ரன் ஸ்ரிபன் அடிகளாரும் சிறப்பு விருந்தினராக இளவாலை மறைக் கோட்ட முதல்வர் யேசுரட்ணம் அடிகளாரும் கௌரவ விருந்தினராக அன்புராசா அ.ம.தி அடிகளாரும் கலந்து கொண்டனர்.

அன்புராசா அ.ம.தி அடிகளார் இளையோரின் தற்கால வாழ்வை மையப்படுத்திய சிறப்புரையை ஆற்றினார். பாடல்கள் நாடகம் வில்லுப்பாட்டு ஆகிய கலை நிகழ்வுகளுடன் சிறப்பு நிழ்வாக யோபுவின் வாழ்க்கை வரலாற்றை சித்திரிக்கும் கூத்தும் இளையோரினால் மேடையேற்றப்பட்டது.

### கிறிஸ்தவ பாடம் புகட்டப்படாத பள்ளிகளின்

# மாணவருக்கு மறைக் கல்வி கற்பிக்கும் இடங்களாக பங்கு மறைப் பாடசாலைகள்



குரு முதல்வர் ஜெயரட்ணம் அடிகளார்

2019 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் மறையாசிரியர்களுக்கான மூன்று மாத வதிவிடப் பயிற்சிக்கு தோற்றவிருக்கும் மறை ஆசிரியர்களின் தகைமையை உயர்த்தும் நோக்குடன் 2018 நவம்பர் 18ஆம் திகதியிலிருந்து 24ஆம் திகதி வரை ஒருவாரகால துரித அடிப்படைப்பயிற்சி யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் யாழ்ப்பாணம், தீவகம், இளவாலை, பருத்தித்துறை மறைக் கோட்டங்களைச் சேர்ந்த 28 பயிற்சியாளர்கள் பங்குபற்றினார்கள்.

இவர்களுக்கு திருவிவிலியம், திருவழிபாடு, திருஅவை, திருவருட்சாதனங்கள், கத்தோலிக்க திருமறையின் அடிப்படை கொள்கைகள் பற்றிய பகுதிகளில் துரித ஆயத்த வகுப்புகள் நடத்தப்பட்டன. அத்துடன் மறையாசிரியர்களுக்கான தலைமைத்துவம், தியானம், வழிபாடு, கலைவழி மறைக் கல்வி, குழுமவாழ்வு பற்றிய பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

பயிற்சியின் இறுதியில் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையுடனான சந்திப்பு நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் கலந்து சிறப்பித்ததுடன் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

குருமுதல்வர் தனது உரையில்; கிறிஸ்தவபாடம் கற்பிக்கப்படாத பாடசாலைகளில் எத்தனையோ கத்தோலிக்க மாணவர்கள் கற்கின்றபடியால் பங்கு மறைப்பாடசாலைகளே மறைக்கல்வி கற்கும் இடமாக இருக்கிறது. இதனை கருத்தில்கொண்டு மறைஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் பணியில் அர்ப்பணிப்போடு கற்பிக்க கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்றும் மறைஆசிரியர் பணிக்கென அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு வயதெல்லை கிடையாது என்பதனையும் சுட்டிகாட்டி இவ்வுன்னதமான பணியில் ஈடுபட்டுள்ளவர்களைப் பாராட்டினார்.

இந்நிகழ்வுகள் யாழ் மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்பணி ஏ.எவ்.பெனற் அடிகளாரின் நெறிப்படுத்தலில் நடைபெற்றன.

# உண்மையின் எண்ணங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத் துறை யாழ். திருமறைக் கலாமன்றத்தின் அனுசரணை யுடன் ஒழுங்கமைக்கும் புதியதோர் கிறிஸ்தவ மனிதநேயப் பண்பாட்டை நோக்கி கிறிஸ்தவ கற்கைகள் பற் றிய பன்னாட்டு மாநாடானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் டிசெம்பர் 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என்ற செய்தி வரவேற் கத்தக்க செய்தியாகும்.

இவ்வாய்வரங்கின் போது நாற்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

வெளிநாடுகளைச் சேர்ந்த அறிஞர் பெருமக்களும் உள்நாட்டு அறிஞர்கள் பலரும் கலந்து கொள்ளவிருக்கும் இவ்வாய்வரங்கானது மாநாட்டின் மையப்பொருள் தொடர்பான தேடலில் ஒரு புதிய பாய்ச்சலை ஏற்படுத்தும் என்பது ஏற்பாட்டாளர்களின் நம்பிக்கை.

2019 ஆம் ஆண்டு கிறிஸ்தவ நாகரிகத் துறைக்கு ஒரு மைல் கல்லாகும். ஏனெனில் அவ்வாண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் ஒரு பிரிவாக ஏற்படுத்தப்பட்டு 40 ஆண்டுகளினதும், தனித்துறையாக ஏற்படுத்தப்பட்டு 30 ஆண்டுகளினதும் நிறைவைக் குறிக்கிறது.

யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறை தலைவர் கலாநிதி ஜே.சி. போல் றோகான் அடிகளாரின் முயற்சியில் நடைபெறவுள்ள இந்த கிறிஸ்தவ கற்கைகள் பற்றிய பன்னாட்டு மாநாடு சிறப்புற நடைபெற காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறோம்.

புதியதோர் கிறிஸ்தவ மனிதநேயப் பண்பாட்டை நோக்கி – யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை அமைக்கும்

# இலங்கை பிரச்சினை;

# பா.ஜ.க.அரசு ஏன் மௌனம்?

இலங்கை அதிபர் மைத்திரி பாலசிறிசேன, இலங்கையில் இரண்டு பிரதமர்கள் இருக்கும் நெறியற்ற நடைமுறையை உருவாக்கியது, நாடாளுமன்றத்தை அதன் தலைவரின் ஆலோசனையைப் பெறாமலேயே தனது விருப்பத்திற்கேற்ப ஒத்திவைத்தது, நாடாளுமன்ற ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்து தெருச் சண்டை போல அங்கு கலவரத்தை உண்டாக்கி, அதன் தலைவர் முகத்தில் மிளகாய் பொடியைத் தூவி, அவரை இருக்கையில் அமர விடாமல் ராஜபக்ஷ ஆதரவாளர் கூத்தடித்தது, இந்த கூத்துக்கு மைத்திரிபால சிறிசேன துணை போனது



இவற்றையெல்லாம் உலகமே கவனித்துக்கொண்டிருக்கிறது.

ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டதற்கு எதிராக இலங்கை நாடாளுமன்றத்தில் சிலதினங்களுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்கீழ், இருமுறை குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், அம்முடிவை ஏற்க சிறிசேனவும் ராஜபக்ஷவும் மறுத்துவிட்டனர்.

அதனைத் தொடர்ந்து, இலங்கை நாடாளுமன்றத்தை வழிநடத்துவதற்கு சிறப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் கூட்டம் கடந்த திங்கள் கிழமை நடைபெற்றது. அதில் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ரணில்விக்ரமசிங்கவின் ஆதரவு உறுப்பினர்கள் பெரும்பான்மை பெற்றனர். இதற்கு சிறிசேன ஆதரவு உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தனர்.

இத்தனைக்குப் பிறகும் விக்கிரமசிங்கவை ஒருபோதும் பிரதமர் பதவியில் நியமிக்க மாட்டேன் என்று சிறிசேன திட்டவட்டமாகக் கூறுகிறார். ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் பதவியில் அமரக் கூடாது என்ற ஒரே நோக்கத்தில் மைத்திரிபால சிறிசேன தொடர்ந்து செயல்பட்டு வந்ததற்கு உலக நாடுகள் கவலை தெரிவித்தன.

அமெரிக்க நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் கிறிஸ்வான் ஹோலன், அதிபர் சிறிசேனவுக்குக் கடிதம் ஒன்று எழுதினார். அதில், இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நீங்கள் பதவி நீக்கம் செய்ததும், அதன் தொடர்ச்சியாக இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை ஏற்க மறுத்தமையும் மிகுந்த வருத்தமளிக்கின்றன. இலங்கை அரசமைப்புச் சட்டத்துக்கு மதிப்பளித்து, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் முடிவுகளை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.


மைத்திரிபால சிறிசேன, அதிபராக இருந்து, ராஜபக்ஷவுக்கு மகுடம் சூட்டினாலும், சிறிசேனவை ராஜபக்ஷ பெரிதாக மதிக்கவில்லை. சிறிசேனவும், ராஜபக்ஷவும் கலந்து கொண்ட பொது நிகழ்வில் அந்நாட்டு தேசியப் பண் இசைக்கப்பட்ட போது சிறிசேனவின் கையை ராஜபக்ஷ அலட்சியமாக தட்டிவிட்டார். இதனைக் கவனித்தபோது, ராஜபக்ஷ, தனக்குக் கீழே அந்நாட்டு சுகாதாரத் துறை அமைச்சராக சிறிசேன இருந்தபோது அவரை எப்படி நடத்தினாரோ அந்த அளவிலேயே இப்போதும் அவர் அதிபர் என்றுகூட நினைக்காமல் நடத்துகிறார் என்பது புரிந்தது.

சிறிசேன-ராஜபக்ஷ இடையேயான உறவு தற்போது விரிசலடையத் தொடங்கியுள்ளது என்பதே உண்மை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த அனுதாபிகள் சந்திரிகாவுடன் இணைந்துவிட்டனர். ரணிலை விரட்ட நினைத்த சிறிசேன இப்போது தனிமரமாக உள்ளார். இப்படிப்பட்ட நிலையில், இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷவின் அதிபர் வேட்பாளராக எதிர்காலத்தில் சிறிசேன இருக்கமாட்டார் என்றும் அவருக்கு பதிலாக சமல் ராஜபக்ஷ இருக்கலாம் என்றும் செய்திகள் வருகின்றன.

இப்படி தினமும் இலங்கையில் கேலிக்கூத்துகள் நடக்கின்றன. சீனா மட்டும் அவர்களுக்கு ஆதரவாக ஓங்கி குரல் கொடுக்கின்றது. நீதிமன்றத்தையும், நாடாளுமன்றத்தையும், அரசியல் கோட்பாடுகளையும் மதிக்காத ஒருவருக்கு சீனா எதற்கு ஆதரவு கொடுக்கிறது என்று இந்தியா யோசிக்கவில்லை. அங்கு ஜனநாயகமும் ஜனநாயகத்தின் கூறுகளும் மதிக்கப்படாமல் இருக்கின்ற அசாதாரண நிலை உள்ளது.

மான்டெஸ்கியூவின் அதிகாரப் பகிர்வு கோட்பாட்டின்படி, நாடாளுமன்றம், நீதிமன்றம், ஆட்சி அதிகார மையம் ஆகியவை, தங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலைகளில் இயங்க வேண்டுமென்பதே ஜனநாயகத்தின் அடிப்படை. கடந்த ஒரு மாதகாலமாக பிரெஞ்சு 16ஆம் லூயியைப் போல சர்வாதிகாரப் போக்கில் இலங்கை அதிபர் சிறிசேன, தானே அரசு என்பது போல நடந்து வருகிறார்.

பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகள், இலங்கை அதிபரின் இந்தப் போக்கைக் கண்டித்துள்ளன. பிரிட்டிஷ் நாடாளுமன் றத்திலும், அமெரிக்க செனட்டிலும் இந்த பிரச்சினை விவாதிக்கப்பட்டு, இலங்கை அதிபர் ஜனநாயக நெறிமுறையிலிருந்து வழுவாமல், அதை முன்னெடுக்க



வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

**கருத்துக் கூறாத இந்தியா**

ஆனால், இந்தியாவோ இது குறித்து எந்தக் கருத்தும் கூறாமல், நடப்பதை மௌனமாக கவனித்து வருகிறது. அது அயல்நாட்டு பிரச்சினை; அதில் நாம் தலையிட முடியாது என்று கூறுகிறது. இது அயல்நாட்டு பிரச்சினை என்றால், ஈழ பிரச்சினைக்குத் தீர்வு காண திம்பு மாநாட்டை ஏன் நடத்தவேண்டும்? ராஜீவ் காந்தி, இலங்கை அரசின் ஒப்புதலில்லாமலே, வடமராட்சியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை ஹெலிகாப்டர் மூலம் வழங்கவில்லையா? அதை அன்றைய அதிபர் ஜெயவர்தன கண்டிக்கவில்லையா?

இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தில்



இந்தியா ஏன் கையொப்பமிட வேண்டும்? இலங்கைக்கு இந்தியா, அமைதிப் படையை எப்படி அனுப்பியது? முள்ளிவாய்க்கால் பிரச்சினையில் இந்தியராணுவத்தை ஏன் அனுப்பியது? முள்ளிவாய்க்காலில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இந்தியா நிதியுதவி செய்தது ஏன்? இப்போது மட்டும் அயல்நாட்டு பிரச்சினை என்பது வேடிக்கையாக இருக்கிறது. இப்போது இந்தியா குரல் கொடுக்காமல் மௌனம் சாதிப்பது நியாயமா?

இலங்கையால், சீனாவின் ஆதிக்கம் இந்தியப் பெருங்கடலில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மாலைதீவுடன் இந்தியாவிற்கு இருந்த நட்பில் விரிசல் ஏற்பட்டது. இருந்தும் மாலைதீவின் புதிய அதிபர் இப்ராகிம் சோலி தன்னுடைய பதவியேற்பு விழாவிற்கு இந்தியப் பிரதமர் மோடியை அழைத்துள்ளார்.

மாலைதீவின் புதிய அதிபருடைய அணுகுமுறை எப்படியிருக்கும் என்று தெரியவில்லை. கடந்த நவம்பர் 5ஆம் திகதி, அமெரிக்கா பொருளாதாரத் தடைக்கு உள்ளாகியிருந்த இந்தியா, சீனா, இத்தாலி, கிரீஸ், ஜப்பான், தென் கொரியா, தைவான், துருக்கி ஆகிய நாடுகளுக்கு விளக்கமளித்தது.

இந்தியாவிற்கு மசகு எண்ணெய் வழங்கும் ஈராக், சவூதி அரேபியா ஆகிய நாடுகளை அடுத்த மூன்றாவது நாடான ஈரானில் அமெரிக்க பரிந்துரையோடு சபஹார் துறைமுகம் கட்ட இந்தியா முதலீடு செய்துள்ளது. இதை சீனா விரும்பவில்லை.

**சீனாவின் மிரட்டல்**

இலங்கையில் நடக்கும் அரசியல் குழப்பத்தால், இலங்கை வழியாக இந்தியாவை மிரட்டக்கூடிய பணிகளை சீனா ஆரம்பித்துள்ளது. எவ்வளவுதான் இந்தியா இலங்கைக்கு உதவி செய்தாலும், இலங்கை நன்றி பாராட்டுவதே இல்லை.

இலங்கையில் பண்டாரநாயக்க பிரதமராக இருந்தபோது, ஜேவிபி புரட்சியால் உள்நாட்டு கலவரம் மூண்டபோது, இந்தியா சிங்கள அரசுக்கு உதவியது. இதே காலகட்டத்தில் வங்க தேசம் உதயமான போது நடந்த போரின்போது, அன்றைய பிரதமர் இந்திரா காந்தி வேண்டிக்கொண்டதை மீறி, பாகிஸ்தான் விமானங்களுக்கு எண்ணெயை நிரப்பி கிழக்கு வங்கப் போருக்கு அனுப்பியது பண்டாரநாயக்க அரசு. 300 மில்லியன் டாலர் மதிப்பீட்டில் 40,000 வீடுகள் கட்டும் ஒப்பந்தம், சீன நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதை நிறுத்தி இந்திய நிறுவனத்திற்கு வழங்க பரிந்துரை செய்தார் பிரதமர் ரணில். இது சீனாவிற்கு ஆத்திரமூட்டியது. அதிபர் சிறிசேனவும் சீனாவிற்கு ஆதரவாகவே செயல்பட்டார். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முற்றம் இந்தியாவிற்கு சிறிசேனவால் மறுக்கப்பட்டது.

ஆனால், 2017ஆம் ஆண்டு, அம்பாந்தோட்டை துறைமுகத்தை, சீனாவுக்கு 99 வருட குத்தகைக்கு வழங்கியது. திருகோணமலை துறைமுகம், எண்ணெய் பாதுகாப்புக் கழகப் பிரச்சினை, கெரவலபிட்டிய எல்என்ஜி மின்சார உற்பத்தி, பலாலி, மத்தள விமான நிலையம் போன்ற பிரச்சினைகளில் சீனா மூக்கை நுழைத்தது. இலங்கை அரசு உறுதியளித்தும், இந்த திட்டங்களை செயல்படுத்த இந்தியா சிக்கலை சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் இரண்டு முக்கியமான பகுதிகளை ராஜபக்ஷ பதவியேற்றவுடன் சீனாவுக்கு வழங்க சிறிசேனவும் ராஜபக்ஷவும் ரகசியமாகத்



திட்டமிட்டனர் என்ற குற்றச்சாட்டும் தற்போது எழுந்துள்ளது. இது உண்மையானால் மிகவும் அபாயகரமானது. இந்திய அரசு இதை கவனிக்க வேண்டாமா?

மாலைதீவில் புதிய அதிபராக முகமது இப்ராகிம் சாலி பதவியேற்றபோது இந்தியப் பிரதமர் மோடியை அழைக்கக் கூடாது என்று இலங்கையும் சீனாவும் காய்களைநகர்த்தின. சீனாமாலைதீவிற்கு கடனுதவியையும் அப்போது அறிவித்தது. ஆனால், புதிதாக பதவியேற்ற அதிபர் இதை ஏற்றுக் கொள்ளாமல் இந்தியாவை அழைத்தார்.

இதையெல்லாம் கவனத்தில் கொண்டு இலங்கை பிரச்சினையில் கடமையாற்ற வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது. அங்கு வாழும் தமிழர்கள் இந்தியாவை நேசிப்பவர்கள். இந்துக்கள் மட்டுமன்றி இந்து கோயில்களும் அழிக்கப்படுகின்றன என்பதை கவனத்தில் கொண்டாவது பா.ஜ.க. அரசு கடமையாற்ற வேண்டாமா?

ராஜபக்ஷவுடன் முள்ளிவாய்க்கால் போரை நடத்திய மைத்திரிபால சிறிசேனவை, நல்லவர் என்று நம்பி, ராஜபக்ஷ ஆட்சிக்கு வரக்கூடாது என்று சிறிசேனவுக்கு வாக்களித்த தமிழர்களுக்கு நன்றி பாராட்டாமல், மீண்டும் ராஜபக்ஷவுக்கே அவர் மகுடம் சூட்டியதை வரலாறு மன்னிக்காது.

கே . எஸ் . இராதாகிருஷ்ணன்
செய்தித் தொடர்பாளர்,
திராவிட முன்னேற்றக் கழகம்

காலைக்கதிர் Kalaikkathir



# ‘கவலையுடன் ஒரு கடிதம்’

**நேற்றைய ‘காலைக்கதிர்’ 6 ஆம், 7ஆம் பக்கங்களில் வெளி யாகி இருந்த கம்பவாரிதி இ.ஜெயரா ஜின் ‘கவலையுடன் ஒரு கடிதம்’ கட்டுரையின் ஒரு பகுதி பக்க ஒழுங்கமைப்பில் தெளிவின்மை காணப்பட்டது. அதனால் அதனை மீண்டும் பிரசுரித்துள்ளோம். வாசகர்கள் மன்னித்தருளுவார்களாக. (ஆ-ர்)**

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்,
எம்.ஏ. சுமந்திரன் அவர்கட்கு,
பேரன்புடையீர்! வணக்கம்.

நலம் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

நாட்டின் நடப்புச் சூழ்நிலையில், தங்களினதும் கூட்டமைப்பினதும் பாரிய பங்களிப்பினை ரசித்துவருகிறேன்.

ஒற்றுமையின் பலத்தை நம் மக்களுக் கும் பேரினத்தார்க்கும் ஒருங்கே உணர்த் தியுள்ளீர்கள்.

பேரினத்து இனவாதிகள், தமிழ் மக்க ளின் நியாயமான உரிமைகளை மறுத்து,

உரிமை கோரி எழுந்த தமிழர்களின் போராட்டங்களை எக்காலத்திலும் மதிக் காமல்,

இடையிடையே இனக்கலவரங்களை ஏற்படுத்தி,

தமிழர்களுக்கு நினைக்கமுடியா இம்சை செய்ததோடு,

ஆயுதப்போராட்டத்தை நசுக்குகிறோம் என்ற போர்வையில்,

பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களை அழித்து ஒழித்து,

உலகமே நடுங்கும் வண்ணம் அட்டூழியங்களைச் செய்தது வரலாறு.

★★★★★

இன்று அவர்களுக்குள்ளேயே மோதல் வெடித்து,

இலங்கையின் ஜனநாயகம் கேள்விக் குறியாய் ஆகியிருக்கும் நிலையில்,

பழையசம்பவங்களைமனங்கொண்டு, பேரினத்தைப் பழிவாங்க நினையாமல்,

நடுநிலையோடும் நேர்மையோடும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க,

நீங்களும் உங்கள் கட்சியினரும் செய்த முன்னெடுப்புக்கள்,

பேரினத்தாரின் நடுநிலையாளர்களை தம் தவறு நினைந்து தலைகுனியச் செய்திருக்கின்றன.

தமிழர்தம் கண்ணியத்தையும் உறுதிப்பாட்டையும், அறிவாற்றலையும்,

இலங்கைத் தேசத்தின்மீதான அவர்க ளது அக்கறையையும் தெளிவாக உணர்த்தி,

தமிழர்கள் இலங்கைத் தேசத்தின் எதிரிகள் அல்லர் என்பதையும்,

அவர்கள் கோருவது தம் நியாயபூர்வ மான உரிமையைத்தான் என்பதையும்,

தக்கநேரத்தில் தக்கபடி உலகுக்கு வெளிப்படுத்தியிருக்கிறீர்கள். - மகிழ் கிறேன்!

★★★★★

உங்களின் நடவடிக்கைகள், தமிழினத்தின்மீதான மதிப்பை உலக ளாவி உயர்த்தியிருப்பது நிஜம்.

முக்கியமாக, நாடாளுமன்ற ஜனநாயக முறை ஜனாதிபதியால் சிதைக்கப்பட்ட போது,

நீதிமன்றில் ஆற்றல் காட்டி நீங்கள் தனிப்பட்ட விதத்தில் நடந்துகொண்டவிதம்,

தமிழினத்தின் அடுத்த தலைமைத் தகுதியை உங்களை நோக்கி நகர்த்தியிருக்கிறது.

முன்னாள் முதலமைச்சரின் சூழ்ச்சிகள் பொங்கி எழுந்து,

கூட்டமைப்பு வீழ்ந்ததோ? எனப் பலரும் நினைத்தவேளையில்,

தற்போதைய உங்களின் செயற்பாடு கள் அதைத் தணியச் செய்துள்ளன.

இவைஅனைத்துக்குமாக உங்களைப் பாராட்டுகின்றேன்.

★★★★★

அதே நேரத்தில் வேறு சிலவற்றையும் உங்களுக்கு உரைக்கவேண்டியிருக் கிறது.

போர் அழிவின் பின்னர், உலகம் தமிழர்க்காகக் குரல் கொடுக்கத் தொடங் கியபோது,

தமிழினம் ஒருமித்து நின்று தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும் என்று,

அறிவுசார்பெருமக்கள்பலரும்நினைந் தார்கள்.

அதனால் தான் புலிகள் காலத்தில் அவர்தம் அழுத்தத்தால் உருவான,

தமிழர் தேசிய கூட்டமைப்பை தமிழர் தம் ஏகத்தலைமையாய் ஏற்கவேண்டும் என,

உங்கள் கட்சி விடுத்த கோரிக்கையை ஏற்று,

தேர்தலில் உங்களை வலிமையுடன் வெற்றி பெற வைத்தார்கள் தமிழர்கள்.

அந்த வெற்றி உங்கள் சமநிலையை குழப்பியதும் உண்மையே.

★★★★★

இனம் என்ற எல்லை மறந்து கட்சி என்ற எல்லைக்குள் நீங்கள் நுழையத் தலைப்பட்டீர்கள்.

கூட்டமைப்புக்குள் உங்களது தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தை,

நீங்கள் விரும்பத் தலைப்பட்டது வெளிப்படை.

அதனால்தான் கூட்டமைப்பை ஒரு கட்சியாய்ப் பதிவு செய்யவேண்டும் என்ற,

உங்களோடிருந்த மாற்றணியினரின் கருத்தை நீங்கள் மறுதலித்தீர்கள்.

உங்கள் உணர்வு மாற்றணியினரை யும் பற்றிக் கொள்ள,

கூட்டமைப்பில் இணைந்திருந்த அனைத்துக் கட்சிகளுமே,

இன அரசியலிலிருந்து கட்சி அரசிய லுக்குள் தாவின.

★★★★★

இவற்றையெல்லாம் தனிப்பட்ட ரீதி யில் உங்களுக்கு நான் எழுதுவது காரணத் தோடுதான்.

புலிகளுக்குப் பின் இனத்தலைமை யை சம்பந்தர் ஏற்ற பிறகு,

அவரது நம்பிக்கைக்குரிய கையாளாய் நீங்கள் செயற்பட்டது வெளிப்படை.

அவர் உங்களை இயக்குகிறாரா? அல் லது நீங்கள் அவரை இயக்குகிறீர்களா? என்பது,

இன்றுவரை கேள்விக்குரிய விடயமா கத்தான் இருக்கிறது. - அது ஒருபக்கம் இருக்கட்டும்.

உங்கள் இருவரது ஒன்றுபட்ட செயற்பாட்டில் உடனிருந்த மற்றவர்களை,

நீங்கள் மதியாது விட்டதுதான், பிரச்சி னைகளை ஆரம்பித்து வைத்தது.

உடனிருந்த மற்றவர்களை ஒடுக்கு தற்காய் எங்கோ இருந்த ஒருவரை வலிந்து அழைத்து வந்து,

முதலமைச்சர் பதவியைக் கொடுத்து, நீங்கள் செய்த இராஜதந்திரம்,

படுதோல்வியில் முடிந்து, உங்களையும் இனத்தையும் பலவீனப்படுத்திற்று.

இந்த விடயத்தில் நீங்கள் மட்டுமன்றி எங்களைப் போன்ற பலரும்கூட ஏமாந்து தான் போனோம்.

★★★★★

எப்படி இன்றைய நாடாளுமன்றப் பிரச்சினையில்,

கட்சியைத்தாண்டி உங்கள் பெயர் தனித்து அடிபடுகிறதோ,

அதுபோலவே அன்று கட்சியின் உடைவுக்கும் இனத்தின் உடைவுக்கும்,

நீங்களே காரணராய்ப் பேசப்பட்டீர்கள்.

அதனால்தான் இனத்தினதும் கட்சியி னதும் உயர்வு தாழ்வுகளில்,

முக்கியப்படுத்தப்படும் உங்களை நோக்கி இக்கடிதத்தை வரைகிறேன்.

★★★★★

தமிழர்தம் உரிமைப் பிரச்சினை என்பது நீண்டநாட்களாய்ப் புரையோடிப் போய்க் கிடக்கும் ஒன்று.

அப்பிரச்சினையில் காலத்திற்குக் காலம் பலரும் முதன்மை பெற்றிருக்கின்றனர்.

அரசியல் தலைவர்களிலிருந்து இயக்கத்தலைவர்கள் வரை,

அங்ஙனம் முதன்மை பெற்றவர்களில் அடங்குவர்.

அந்த வரிசையில்தான் இன்று உங்க ளுக்கான முதன்மை கிடைத்திருக் கிறது.

இதனை நீங்கள் மறத்தலாகாது.

அதனால் அப்பிரச்சினையை அணு கும் போது இன்றைய காலவரம்பை மட் டும் வைத்து அணுகாமல்,

தூரநோக்கோடும் கட்சிப்பற்றுதலைத் தாண்டிய இன உணர்வோடும்,

அதனை அணுகுதல் அவசியம் என் பதை தங்களுக்கு உறுதியாய் நினைவு படுத்த விரும்புகிறேன்.

★★★★★

அதனால்,

பழையபடிஉங்களுக்குமுக்கியத்துவம் ஏற்பட்டிருக்கும் இந்நேரத்தில்,

நீங்களும் உங்களைச்சார்ந்த கட்சியும் தொடரப்போகும் உங்கள் நடவடிக்கைகள் பற்றி,

மறுபரிசீலனை செய்து கொள்வது நல்லதென்றுபடுகிறது.

ஏலவே தமிழர்கள் சிறுபான்மையாய் ஆனதால் தான்,

இந்நாட்டில் பிரச்சினைகளைச் சந்தித் துக் கொண்டிருக்கிறோம்.

இந்நிலையில் வரலாற்றுப் பதிவுகளை மறந்து,

கட்சி, தன்முனைப்பு போன்ற சிறுசிறு விடயங்களுக்காக,

மேலும் இனத்தைப் பிரிவு செய்து பலவீனப்படுத்துவது,

எவ்விதத்திலும் சரியான செயலாய் இராது என்பது என் எண்ணம்.

தொன்மைமிக்க ஒரு கட்சியும், அதன் வன்மைமிக்க உறுப்பினராகிய நீங்களும்,

இப்பிழைக்கு வழிசமைத்தலாகாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

★★★★★

அரசியல் அனுபவம் இல்லாத - அரசியலிலும் நிர்வாகத்திலும் தோற் றுப்போன,

மு.முதலமைச்சர் இத்தகு காரியத்தில் ஈடுபடுவது என்பது வேறு.

அனுபவமிக்க ஒரு கட்சியும் அதன் உறுப்பினர்களும் இத்தகு காரியத்தில் ஈடுபடுவது என்பது வேறு.

இன்றுவரை மக்கள் தந்த ஏகத்தலைமை என்ற தகுதி உங்களிடம்தான் இருக்கிறது.

அந்நிலையை உணர்ந்தே இப்பிரச்சி னைகளை நீங்கள் கையாள வேண்டும் என்பது என் விருப்பம்.

★★★★★

கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், புளொட்டும் முதலமைச்சரால் மூக்குடை பட்டு நிற்கிறார்கள்.

சுரேஷுக்கும் அந்நிலை விரைவில் ஏற்படலாம்.

இந்நேரத்தில் நீண்ட வரலாற்றையும் தமிழ் மக்களின் நம்பிக்கையையும் பெற்ற உங்கள் கட்சி,

எப்படி பேரினத்தார்க்கு நிதானத்தோடு பெருந்தன்மையை உணர்த்தியுள்ளதோ,

அதுபோன்ற பெருந்தன்மையுடனும் தாய்மை உணர்வுடனும்,

உங்களை விட்டுப் பிரிந்து சென்ற மற் றைக் கட்சியினருக்கும்,

அப்பெருந்தன்மையைக் காட்டுதல் அவசியமாம்.

- தமிழினத்தின் நன்மை நோக்கி ஒன்றுபட வாருங்கள்! என,

அவர்களை நோக்கி நீங்கள் ஒருதரம் அழைப்பு விடுத்தால்...,

அதுதமிழ்மக்களையும்கூட்டமைப்பின் பலத்தையும்,

நிச்சயம் வலிமைப்படுத்தும் என நம்புகிறேன்.

ஆனந்தசங்கரி, கஜேந்திரகுமார், சுரேஷ் போன்றோர்க்கு மட்டுமல்லாமல்,

டக்ளஸ், வரதராஜப் பெருமாள், ஜன நாயக போராளிகள் கட்சியினர். ஆகியோ ருக்கும் கூட,

இவ்வழைப்பு உங்களால் விடப்பட வேண்டும் என்பது என் விருப்பம்.

இது யதார்த்தத்திற்கு முரண் என்று நீங்கள் கருதுவீர்கள்.

சாத்தியப்படாத முயற்சி என்று நினைப் பீர்கள்.

அவற்றை அறியாது நான் இதை எழுத வில்லை.

★★★★★

காலவிஷேடத்தால் சில குழுக்களை, நம் இனம் துரோகிகள் என முத்திரை குத்தி வைத்திருக்கிறது.

அவ்வப்போது அம்முத்திரைகளில் மாற்றமும் நிகழ்ந்திருக்கிறது.

பலரின் பகையையும் சம்பாதிப்பேன் என்று தெரிந்துகொண்டே எழுதுகிறேன்.

அங்ஙனம் துரோகி முத்திரை குத்த வேண்டுமானால்,

அம்முத்திரை நம் எல்லாத் தலைமை கள் மீதும் விழும் வாய்ப்பிருக்கிறது.

பழமையைப் பேசி பகை வளர்த்துப் பிரயோசனம் இல்லை.

அங்ஙனம் பேசவேண்டுமானால் நிகழ்ந்த இனக்கலவரங்கள் எல்லாவற்றி லும் பங்களிப்புச் செய்த,

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக இன்று நீங்கள் செயற்படுவதில் அர்த்தம் இல்லாமல் போகும்.

காலமாற்றத்தில் நல்லவர் தீயவராவ தும், தீயவர் நல்லவராவதும் இயற்கை யேயாம்.

இவ்உண்மைஉணர்ந்தே, இன்றைய நிலையில் நீங்கள் செயற்பட வேண்டும் என விரும்புகிறேன்.

★★★★★

கூட்டமைப்பின் மீதான மதிப்பு உயர்ந் திருக்கிற நேரம் இது.

மற்றவர்கள் உங்கள் அழைப்பேற்று வருகிறார்களோ இல்லையோ,

இந்நேரத்தில் நீங்கள் விடுக்கிற அழைப்பு என்பது,

உங்கள் கட்சியின் மீதான மதிப்பை நிச்சயம் உயர்த்தும்,

ஏகத்தலைமை என்ற ஒன்றை உரு வாக்குவதற்கும் அது காரணமாய் அமை யும்.

இதுதான் அனைத்துத் தமிழரதும் ஒன்றுபட்ட அமைப்பு என்ற உணர்வை அது உருவாக்கும்.

உயர்ந்திருக்கையில் காட்டும் பணிவு மக்கள் மனதைக் கவரவல்லது.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு என்கிறார் வள்ளுவர்.

சுருக்கத்தில் உயர்வு காட்டி நிமிர்ந்தீர் கள். இப்போது பெருக்கத்திலும் பணிவு காட்டி,

மக்கள் மனதை நீங்கள் கவரவேண் டும் என்பது எனது வேண்டுகோள்.

★★★★★

ஆயிரம்தான் பலம் இருந்தாலும் மக் கள் ஆதரவுதான் ஜனநாயகத்தின் முது கெலும்பு!

அது இன உரிமைக்கோரிக்கையின் முதுகெலும்புமாம்!

அதனைப் பலப்படுத்தவேண்டிய நிலையில் தங்கள் கட்சியும்,

ஏன் தாங்களும்கூட இருப்பதாய்ப்படுகி றது.

மானம் பார்க்காத சில விட்டுக்கொடுப் புக்கள் உங்கள்மீதான மதிப்பை நிச்சயம் உயர்த்தும்.

கட்சியைப் பலப்படுத்த நீங்கள் சில காரியங்களைச் செய்தே ஆகவேண்டும்.

உங்கள் செயற்பாடுகள் வலிமையாய் இருந்தபோதும்,

மக்கள் மயப்பட்டு இருக்கவில்லை என்பது என் கருத்து.

மக்களை ஈர்க்கும் முயற்சியில், தனிப்பட்ட ரீதியிலும் கட்சி ரீதியிலும்,

நீங்கள் சிறிதுகூட ஈடுபடுவதாய்த் தெரியவில்லை.

முன்பொருமுறை கட்சியைப் பலப் படுத்த கூட்டமைப்பு என்ன செய்யவேண் டும்? என்பது பற்றி,

கட்சியைச் சீரமைக்க கூட்டமைப்பின ருக்கு சில ஆலோசனைகள் என்ற தலைப்பில்

நான் ஓர் கட்டுரை எழுதியிருந்தேன். (அக்கட்டுரையை உகரத்தின் அரசியல் களத்தினுள் இப்போதும் காணலாம்.)

அக்கட்டுரை தங்களால் பார்க்கப்பட வில்லை என்று தெரிகிறது.

எதிரிகளின் கருத்துக்களையே தள்ளக் கூடாது என்ற நிலையில்,

நடுநிலையாளரின் கருத்தைக்கூட கவனிக்காத உங்கள் நிலை கவலை தருகிறது.

இப்படியே போனால் மக்களிலிருந்து அந்நியப்பட்டுப் போவீர்கள்.

இன்று ஏற்பட்டிருக்கும் மீள் எழுச்சியில், நீங்கள் உங்களைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

உங்கள் மீது நம்பிக்கையும் அக்கறை யும் கொண்டவன் என்ற வகையிலேயே, இவற்றை எழுதுகிறேன்.

உங்கள் மீதான அக்கறை என்பது இனத்தின்மீதான அக்கறை!

உங்கள் உயர்வு நோக்கி எனது வாழ்த் துக்கள்.

- இன்பமே எந்நாளும் துன்பமில்லை

**அன்புடன்,**
**இ.ஜெயராஜ்**

# 10 மாதங்களில் மட்டும் 310 பேருக்கு எயிட்ஸ்!

2018 இல் கடந்துள்ள 10 மாதங்களில் மாத்திரம் 310 பேர், எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்று தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்தகாலங்களுடன் ஒப்பிடுகையில் எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்கானோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் 285 பேர் மாத்திரமே எச்.ஐ.வி. தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

பல்வேறு நோய்களால் தாக்கப்பட்ட ஒருவருக்கு, அவருடைய உடலின் நோய் எதிர்ப்பு சக்தி குறையத் தொடங்கியிருப்பதை மருத்துவ பரிசோதனை உறுதி செய்யும் பரிதாபகரமான நிலை தான் எய்ட்ஸ். (ஐ)

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட அச்சத்தையடுத்தே முன்னாள் போராளி கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார் என்று அறியமுடிகிறது.

பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த கிளிநொச்சி – வட்டக்கச்சியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான இராசநாயகம் சர்வானந்தனை (வயது – 48) நீதிமன்றில் முற்படுத்தாது ஒரு வாரத்துக்குத் தடுத்து வைத்து விசாரிக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தயாராகி வருகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

தானாகக் குற்றத்தை ஒப்புக்கொண்டு சந்தேகநபர் இன்று (நேற்று) காலை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். விசாரணைகளின் பின்னரே தகவல் வெளியிட முடியும். சந்தேகநபர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று கிளிநொச்சிப் பொலிஸார் முன்னர் தெரிவித்திருந்தனர்.

எனினும் சந்தேகத்தின் அடிப்படையில் முன்னாள் போராளி கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நேற்று மாலை தெரிவித்தார்.

வவுணதீவு சோதனைச் சாவடியில் பாதுகாப்புக் கடமையில் இருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் அதிகாலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

காலியைச் சேர்ந்த நிரோஷன் இந்திக, கல்முனையை சேர்ந்த கணேஸ் தினேஸ் ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். அவர்களைக் கட்டிப்போட்டுவிட்டு அவர்களிடமிருந்த இரண்டு – ரி 56 துப்பாக்கிகளையும் பறித்துச் சூடு நடத்தப்பட்டுள்ளது. துப்பாக்கிகள் இரண்டும் மர்மநபர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தையடுத்து நேற்று முன் தினம் மாலை தொடக்கம் கிளிநொச்சி – வட்டக்கட்சிப் பகுதியிலுள்ள முன்னாள் போராளியின் வீடு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

முன்னாள் போராளியின் பெயரைக் குறிப்பிட்டு, அவரைச் சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்குட்படுத்தவேண்டும் என்று அவரின் உறவினர்களிடம் பொலிஸார் கூறியுள்ளனர்.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் நடவடிக்கையில் அச்சம் கொண்ட முன்னாள் போராளி நேற்றுக் காலை கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். அவர் கிளிநொச்சிப் பொலிஸார் ஊடாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளார்.

அதனால் சந்தேகநபரை கொழும்புக்கு அழைத்துச்சென்று 7 நாள்களுக்கு தடுத்துவைத்து விசாரிக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று அறியமுடிகிறது. (ஐ)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் பேரணி ஒன்றை நடத்தினர்.

இந்தப் பேரணி கஸ்தூரியார் வீதிச் சந்தியில் ஆரம்பித்து யாழ்ப்பாணம் பஸ் நிலையம் வரை சென்றது. பின்னர் அங்கு நாடாளுமன்றத் தேர்தலை வலியுறுத்திக் கவனவீர்ப்புப் போராட்டம் நடந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'சுமந்திரனின் சொல்லு ரணிலின் மூச்சு', 'நல்லாட்சி அரசு போகட்டும்; மக்கள் ஆட்சி வேண்டும்', 'மக்கள் தீர்ப்புக்கு வழிவிடுங்கள்', 'தேர்தல் நடத்த ஏன் பயம்?' போன்ற வாசகங்களை ஏந்தியவாறு பேரணியில் ஈடுபட்டனர். (ஐ – 07)

## தனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான எதிர்க்கட்சிப் பதவியைக் கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த காலங்களில் அரசின் பங்காளிக் கட்சி போலவே செயற்பட்டது. ஆனால், இதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைப்பதற்கு ஆதரவளிக்கப்படும் என ஜனாதிபதிக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடிதம் அனுப்பியுள்ளது. இதன் மூலம் ஐ.தே.கவுக்கும், கூட்டமைப்புக்கும் இடையிலான கள்ள உறவு அம்பலமாகியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தால் மட்டுமே சமஷ்டித் தீர்வை பெறமுடியும். பெப்ரவரி 4 ஆம் திகதிக்குள் அதை வழங்க வேண்டும் எனக் கூட்டமைப்பு நிபந்தனை விதித்துள்ளது. கூட்டமைப்பின் அனுமதியின்றி வடக்கு, கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கக் கூடாது எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தனி ஈழத்தை அடைவதற்கான வழிமுறையே இது. எனவே, மக்கள் சிந்திக்கவேண்டும் – என்றார். (ஐ)

## பொட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறார் என முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளீதரன் தெரிவித்துள்ளார்.

ரிவிர சிங்கள இதழுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது –

மட்டக்களப்பில் இரு பொலிஸார் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் காரணமாகயிருக்கலாம் . விடுதலைப்புலிகள் அமைப்புக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டும் நடவடிக்கையில் பொட்டு அம்மான் நோர்வேயில் மறைந்து வாழ்கின்றார். நல்லாட்சி அரசு நாட்டின் புலனாய்வுப் பிரிவைச் செயலிழக்கச் செய்துள்ளதுடன் தேசிய பாதுகாப்பை புறக்கணித்து பாதுகாப்புப் படையினருக்கு அவமரியாதையை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக விடுதலைப்புலிகள் மீண்டும் தலைதூக்குவது ஆச்சரியமளிக்கவில்லை. விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு நானும் உதவியுள்ளேன் – என்றார். (ஐ)

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படும் யுத்த உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விடே அதிரடிப் படையின் முல்லைத்தீவு முகாமின் அதிகாரிகளால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த உபகரணங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் 2250 ரி – 56 ரக தோட்டாக்கள், ஆர்.பி.ஜி. தோட்டாக்கள் 03, 06 செல்கள் உட்பட மேலும் பல ஆயுதங்களும் அடங்குகின்றன. (ஐ)

## மஹிந்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொன்றை விடுக்கவுள்ளார்.

ஆட்சியமைப்பதற்குரிய பெரும்பான்மைப் பலத்தை (113) ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி உறுதிப்படுத்தியுள்ளதால் பிரதமர் பதவியைத் துறக்கும் முடிவையே மஹிந்த அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நவம்பர் 26 ஆம் திகதி முதல் டிசெம்பர் முதலாம் திகதிவரை நடைபெற்ற அரசியல் நிகழ்வுகள் தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தவுள்ள மஹிந்த, பொதுத்தேர்தலை உடனடியாக நடத்துவதற்குரிய வலியுறுத்தலை விடுப்பார் எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சிக்கும் அதன் பங்காளிக் கட்சிகளுக்கும் அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் வகையில்கூட மஹிந்தவின் அறிவிப்பு அமையலாம் என அவருக்கு நெருக்கமானவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதற்கிடையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 4 ஆம் திகதி விசேட அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளார் என்று சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமராக்கினார் என அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் சொத்துகளைப் பாதுகாக்கவும், வீழ்ச்சி அடைந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும், நாட்டில் சமஷ்டி ஆட்சி உருவாகுவதைத் தடுக்கவும், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதை தடுக்கவுமே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரணிலை அகற்றி மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கினார்.

எனவே இதனைப் பொறுப்பேற்காது இருந்திருந்தால் அடுத்த ஏழு, எட்டு மாதங்களில் பிரதமர் பதவி இலகுவாகக் கிடைத்திருக்கும். அதனைவிட்டு தாய்நாட்டுக்காக அவர் இதனைப் பொறுப்பேற்றுள்ளார்.

தற்போது நாடாளுமன்றத்துக்குள் சண்டியர்களும் வருகை தந்துள்ளனர். ஆகவே தற்போது நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் சட்டரீதியானதல்ல.

ஜனாதிபதியால் பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட்டால் அதனை சபாநாயகர் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் சபாநாயகர் அதனை செய்ய தவறியுள்ளார் – என்றார். (ஐ)

## ரணிலே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்களின்போதும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே, பிரதமர் பதவியைத் தற்போது தான் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார்.

இந்த நேரத்தில் பிரதமரின் பதவியை ஏற்றுக்கொள்ளும் நோக்கம் இல்லை. ஆனால் எதிர்கால நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே.கவின் கட்சியின் பிரதமர் வேட்பாளராக இருக்கக் கூடும். எனினும், அதுபற்றி கட்சியின் செயற்குழு தான் முடிவு செய்யும்.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிக்க வேண்டும் என்பதே கட்சியின் உறுதியான நிலைப்பாடு என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## நான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவு கட்டுவேன்.

– இவ்வாறு பொங்கியெழுந்து கடும் சீற்றத்துடன் கருத்து வெளியிட்டுள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்து ஆட்சியமைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி தயாராகிவருவதால், பதவி துறக்கவேண்டிய நிலை மஹிந்தவுக்கும், அவரின் சகாக்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக இடம்பெற்றுவரும் அரசியல் சமரிலிருந்து இறுதிநேரத்தில் மஹிந்தவுக்குப் பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதானது அவரது அரசியல் பயணத்தில் பாரிய சரிவாகப் பார்க்கப்படுகின்றது.

மைத்திரியுடன் இணைந்து பிரதமர் பதவியை ஏற்காது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையேற்று மாகாண சபைத் தேர்தலை எதிர்கொண்டிருந்தால் 65 சதவீதத்துக்கும் மேலான வாக்குகளை பெற்றிருக்கலாம். அடுத்து நடைபெறும் தேசிய மட்டத்திலான தேர்தல்களிலும் வெற்றி வாகை சூடியிருக்கலாம் என மஹிந்தவுக்கு நெருக்கமான சிலர் அவரை நேரில் சந்தித்து குறிப்பிட்டுள்ளனர்.

இதனால் சீற்றமடைந்த மஹிந்த –

பெரும்பான்மை இருக்கின்றது எனச் சுதந்திரக்கட்சித் தரப்பிலிருந்து உறுதியளிக்கப்பட்டது. நான் பதவியேற்றால்தான் முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட தரப்பு ஐ.தே.கவைவிட்டு வெளியேவரும் எனவும் கூறப்பட்டது. அதுமட்டுமல்ல நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் நல்ல எண்ணத்துடனும் தான் நான் முடிவொன்றை எடுத்தேன்.

எதுஎப்படியோ நீதிமன்ற முடிவு பாதகமாக அமைந்தால், மாகாணசபைத் தேர்தல் கட்டாயம் நடத்தப்படவேண்டும். அதற்குரிய அழுத்தங்களை நான் நேரில் இறங்கிக் கொடுப்பேன். பொதுத்தேர்தல் நடத்தப்பட்டாலும் பரவாயில்லை. மஹிந்த என்றால் யார் என்பதை சிலருக்குப் புரியவைக்கவேண்டியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் சந்தித்த மஹிந்த, 'பிரச்சினையை யார் உருவாக்கினார்களோ அவரையே தீர்க்க சொல்லுங்கள். தேர்தல் வரட்டும். நான் பதிலடி கொடுக்கின்றேன்' – என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களமாடிய பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய 'அரசியல் வகிபாகம்' வாழ்த்தி வரவேற்கும் வகையில் அமைந்திருக்கின்றது.

– இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஆட்சியமைப்பதற்கு தமது கட்சி முழு ஆதரவையும் வழங்கத் தீர்மானித்துள்ளது எனக் குறிப்பிட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

கூட்டமைப்பின் இந்த முடிவை வரவேற்று கருத்து வெளியிட்ட வேலுகுமார் எம்.பி. மேலும் கூறியதாவது:–

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாம் வகித்த பதவிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களை ஆட்சிக்கவிழ்ப்பு சூழ்ச்சிக்காகவே பயன்படுத்தினார். மஹிந்த படையணியின் உதவியோடு சட்டவாக்க சபையையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டார்.

எனினும், இந்தச் சூழ்ச்சிக்குத் துணைபோகாது பிரதான அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புகளும் ஓரணியில் திரண்டன. அதியுயர் சபையின் சுயாதீனத் தன்மையையும், ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்காக சபாநாயகர் துணிச்சலுடன் செயற்பட்டார். பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நீதி – நியாயத்தின் பக்கம் நின்று போராடியது.

அரசியல் நெருக்கடியால் நாட்டின் பொருளாதாரம் சரிந்துவிட்டது. சுற்றுலாத்துறையும் வரலாறு காணாத வகையில் வீழ்ச்சியடைந்து வருகின்றது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டைவிட்டோடுகின்றனர். அரச மற்றும் நிர்வாக இயந்திரங்கள் முற்றாக முடங்கியுள்ளன. இந்நிலைமை தொடருமானால் நாட்டுக்கு பேராபத்து ஏற்படும்.

எனவே, நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு, அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் எடுக்கப்பட்டுள்ள அரசியல் முடிவானது நிச்சயம் வரலாற்றில் இடம்பிடிக்கும். இதற்கும் புலிச்சாயம் பூசி தெற்கு மக்களை திசை திருப்பி – வாக்கு வேட்டை நடத்துவதற்கு மஹிந்தவும், அவரின் சகாக்களும் முயற்சிக்கலாம். இனவாதத்தைக் கக்கலாம். ஆகவே, இந்த ஏமாற்று நயவஞ்சக அரசியல் பொறிக்குள் சிங்கள மக்கள் சிக்கிவிடக் கூடாது.

அதேவேளை, கட்சிக்குள்ளேயே எதிர்ப்பலைகள் கிளம்பிய போதும் அவற்றையெல்லாம் சமாளித்து – பல சவால்களுக்கு முகங்கொடுத்து ஜனநாயகத்துக்காகவும், நாட்டின் நலனுக்காகவும் ஐக்கிய தேசிய முன்னணிக்கு தமிழ்க் கூட்டமைப்பு நேசக்கரம் நீட்டியுள்ளது.

இந்த உதவியை ஐக்கிய தேசிய முன்னணியும் அதன் பங்காளிக் கட்சிகளும் என்றும் மறக்கக் கூடாது. புதிய ஆட்சி உதயமான கையோடு தமிழ் மக்களுக்குரிய தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் நாமும் விழிப்பாகவே இருப்போம். அரச கூட்டணிக்குள் இருந்தபடியே அழுத்தங்களைப் பிரயோகிப்போம் – என்றார். (ஐ)

THIYAHIE CHARITABLE TRUST

# தியாகிஅறக்கொடைநிறுவனத்தின் ஸ்தாபகர் சமூகஜோதி உயர்திரு. வாமதேவாதியாகேந்திரன் அவர்களின் 67ஆவது பிறந்ததினமான 02.12.2018 இன்று நற்பணிகளுக்காக ஒரு கோடி ரூபாவை வாரி வழங்குகிறார்

திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்கள் புலம் பெயர்ந்து வாழும் எமது மக்களின் முன்னோடியாகத் தான் பிறந்த தாய் நாட்டிற்கு அளப்பரிய சேவையாற்ற வேண்டும் என்ற ஆர்வத்தோடு இதுவரை பல கோடி ரூபாய்களை சமூகசேவை செயற்பாடுகளுக்காக செல வழித்துள்ளார்.

தனது சொந்த நிதிப்பங்களிப்புடன் இலங்கை முழுவதும் மூவின மக்களுக்கும் சேவை செய்யும் முன்னோடி நிறுவனமாக **தியாகி அறக்கொடை நிறுவனம்** அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

இவர் பிறந்த தினமான இன்று பின்வரும் விசேட செயல் திட்டங்களுக்கு இன்று மட்டும் ஒரு கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

1) திருமணமாகாத மகளிருக்கான நிலையான வைப்புத்திட்டம் ஒன்றை அங்குராப்பணம் செய்யவுள்ளார்.

2) வீடமைப்பு திட்டத்திற்காகப் பல கோடி பெறுமதியான காணிகள் கொள்வனவு செய்யப்பட்டு பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுவரும் அதேவேளை, எமது பணியாளர் ஒருவருக்கு வீட்டுத்திட்ட பத்திரமும் வழங்கப்படவுள்ளது

3) St. John's Bosco வித்தியாலயத்திற்கு Pavilion அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

4) பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

5) செம்மணி இந்து மயானத்தில் இவரினால் நடப்பட்ட 200 மரங்களைப் பராமரிப்பிற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

6) முதியோரை கௌரவப்படுத்துவதற்காக புதிய ஓய்வூதிய திட்டம் ஒன்று தொடங்கப்படவிருக்கின்றது.

7) பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்படவிருக்கின்றன.

8) சமய செயற்பாடுகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கைலாசபிள்ளையார் கோவில் மற்றும் தென் பகுதியில் பௌத்த விகாரை ஒன்றிற்கும் புனரமைப்பு செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

9) எமது நிறுவன ஊழியர் நலன்புரி திட்டத்திற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

10) விசேட தேவை உடையவர்களுக்கு மூன்று சில்லு சைக்கிளகள் வழங்கப்பட இருக்கின்றன.

11) பார்வைக் குறைபாடுடைய பாடசாலை மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட விருக்கின்றன.

12) சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1000 தென்னங்கன்றுகள் வழங்கப்படும் அதேவேளை வேறு பல பயனுள்ள மரக்கன்றுகளும் வழங்கப்படவுள்ளன.

13) முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உதவி - பின் தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மிகவும் வசதி குறைந்த முன்பள்ளி பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான உதவி வழங்கப்படவுள்ளன.

14) சுயமுயற்சித் திட்டத்தின் கீழ் வறுமை கோட்டிற்குட்பட்ட பெண்களுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன.

15) வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் மூன்று வியாபார நிலையங்கள் புனரமைப்பு செய்யப்பட்டு வியாபாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

16) நடமாடும் வியாபாரக் கொட்டகை ஒன்று பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

17) TCT Multi Trade Centre இல் வேலைசெய்யும் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வும் வழங்கப்பட உள்ளது.

18) வடமாகாண கிரிக்கட் சங்கம் ஒன்றிற்கு துடுப்பாட்ட வீரர்களுக்காக 2 லட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

19) மாணவர்களுக்கு இரண்டு சில்லு சைக்கிள்களும் வழங்கப்படவுள்ளன.

20) வசதி குறைந்தத் தெரிவுசெய்யப்பட்ட ஆட்டோ சாரதிகளுக்கு கடன் வசதி செய்து கொடுக்கப்பட்வுள்ளது.

இவர் பல ஆண்டுகளாக கோடிக்கணக்கான ரூபாய்களை மாதாந்தம் பின்வரும் வாழ்வாதார செயல் திட்டங்களுக்கு வாரி வழங்குகின்றார் என்பதனை இங்கே குறிப்பிட விரும்புகின்றோம்.

### 1. கல்வி ஊக்குவிப்புச் செயற்திட்டம்: -

★ முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உதவி

பின் தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மிகவும் வசதி குறைந்த முன்பள்ளிப் பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படுகின்றது.

★ அத்துடன் பார்வை குறைபாடுடைய மாணவர்களுக்கு மூக்கு கண்ணாடிகளும் மாதாந்தம் வழங்கப்படுகின்றன.

★ பாடசாலை மாணவர்களுக்கான உதவி

மிகவும் வசதிகுறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக மாதாந்தம் உதவிகள் வழங்கப்படுகின்றன. இதில் ஆயிரக்கணக்கானோர் பயனடைகின்றனர்.

★ பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவி

பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு அவர்களின் கல்வி தேவைக்காக மாதாந்தம் தலா 1000/= வழங்கப்படுகின்றது.

அத்துடன் தொழில் நுட்பகல்லூரியில் பயலும் ஆசிரிய மாணவர்களுக்கு மாதாந்த உதவியும் வழங்கப்படுகின்றது.

### 2. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிச் செயற்திட்டம்

★ கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட மிகவும் வறிய நிலையில் இருக்கும் குடும்பங்கள் பொருளாதார முயற்சியில் வருமானத்தை ஈட்ட தொடங்கும் வரை அவர்களின் குடும்ப நிலைக் கேற்ப மாதாந்தம் தலா ரூபா 500/= தொடக்கம் ரூபா 2000/= வரை வழங்கப்படுகின்றது.

★ பொருளாதார முயற்சியில் ஈடுபட்டுள்ள மாதர் சங்கங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் உள்ளூர் உற்பத்திகளைச் சந்தைப்படுத்த வசதிசெய்து கொடுக்கப்படுகின்றது.

### 3. மருத்துவ உதவிச் செயற்திட்டம்

★ புற்று நோயாளருக்கான உதவி

புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட மிகவும் வறிய நிலையில் உள்ள நோயாளர்களுக்கு மருத்துவ செலவிற்காக மாதாந்தம் தலா ரூபா 1000/= வழங்கப்படுகின்றது.

★ முதியவர்களுக்கான மருத்துவ உதவி

பிரதேச செயலகங்களின் ஊடாக மாவட்ட அலுவலகர், சமூக சேவை திணைக்களத்தினால் வைத்திய உதவி போதியளவு பெறமுடியாத வறுமைக்குட்பட்ட முதியோர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் இலவச மருத்துவ சேவை எம்மால் வழங்கப்படுகின்றது. அத்துடன் இவர்களுக்கு இலைக் கஞ்சியும், போக்குவரத்து வாகன வசதிகளும் வழங்கப்படுகின்றன.

★ ஏனைய மருத்துவ உதவி

மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு செல்லும் மிகவும் வசதி குறைந்த நோயாளருக்கு போக்குவரத்த செலவுக்காகவும், மருந்துச் செலவுக்காகவும் உதவி வழங்கப்படுகின்றது

### 4. ஆதரவற்ற முதியவர்களுக்கான உதவிச் செயற்திட்டம்

★ ஆதரவற்று வறுமைகோட்டின் கீழ் வாழும் முதியோர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு தலா ரூபா 500/= வழங்கப்படுகின்றது.

### 5. மகளிர் மீள் எழுச்சித்திட்டம்

★ பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள பெண்களுக்கு மாதாந்தம் 1000/= ரூபா உதவித் தொகையாக வழங்கப்பட்டு அவர்கள் பொருளாதார முயற்சிகளில் ஈடுபடுவதற்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

### 6. தாய் - சேய் நலத்திட்டம்

★ வறுமைக் கோட்டிற்குட்டபட்ட ஒரு வருடத்திற்குட்பட்ட குழந்தையையுடைய தாய்மாருக்கு மாதாந்தம் ரூபா 1000/= பெறுமதியான சத்துணவுப் பொதி வழங்கப்படுகின்றது.

### 7. சூழல் பாதுகாப்புத்திட்டம்

★ இத்திட்டத்தின் ஊடாக செம்மணி இந்து மயானம் தெரிவு செய்யப்பட்டு, இங்கு 200 நிழல் தரும் மரங்கள் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் மாதம் தோறும் இவ் மயானத்தின் பராமரிப்புக்காகவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**கடந்தகாலங்களில் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடதக்க சமூக சேவைத் திட்டங்கள்:-**

1) நோயாளர்களின் நலன் கருதி வவுனியா பொது வைத்தியசாலைக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை வழங்கவதற்கான பொறி முறைக்கு 40 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

2) யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு நுழைவாயில் அமைத்து கொடுத்ததிற்கு ஆறு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா வழங்கப்பட்டது.

3) புனித பத்திரிசியார் கல்லூரிக்கு டெனிஸ் மைதானம் ஆறு லட்சம் ரூபா செலவில் அமைத்து கொடுக்கப்பட்டது.

4) எழிலூர் கிராமத்திற்கு எட்டு இலட்ச ரூபா செலவில் முன்பள்ளி ஒன்று அமைத்து கொடுக்கப்பட்டது.



5) மதவாச்சியில் சுயதொழில் முயற்சியாளர் ஒருவருக்கு நாலு லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

6) வேம்படி மகளிர் கல்லூரியின் இரு மாடி கட்டடத்திற்கு மின் இணைப்பிற்காக இரண்டு லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

7) சென். ஜோன்ஸ் கல்லூரிக் கூடைபந்தாட்ட திடலுக்கு 10 லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

8) முதியோர் தின மற்றும் சிறுவர் தின நிகழ்வுகளுக்கு குறிப்பிட்ட சில பிரதேச செயலகங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

9) தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலையின் புற்றுநோய் சத்திர சிகிச்சை பிரிவின் புனரமைப்பிற்கு கணிசமான பங்களிப்பு வழங்கப்பட்டது.

10) அத்துடன் பல வருடங்களாகத் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஞாயிற்றுகிழமைகளிலும் முதியோருக்கு இலவச மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்புடவதோடு இவர்களுக்கான இலவச போக்குவரத்து வசதிகளும் வழங்கப்படுகின்றன.

11) யாழ் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தின் கற்றல் வளநிலையம் 5 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டது.

சீ.மாணிக்கராசா
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி பனிமனை, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.